திரு. ப.சு. சின்னசாமிக்கவுண்டர் நினைவு

அறக்கட்டளை ஆய்வுரைகள்

(மூன்றாம் ஆண்டு)

சொற்பொழிவாளர்கள்

வேல்தடக்கைச் செம்மலார்

(தணிகைப் புராண அறிமுகம்)

சித்தாந்தச் செழுங்கதிர்

பேரா. முனைவர் ந.இரா. சென்னியப்பனார்

பேரூர், கோவை- 10

குன்றக்குடி மயூரகிரிநாதர் பிள்ளைத்தமிழ்

குன்றக்குடி ஆதீனப் புலவர்

சிந்தாந்தச் செல்வர்

வித்துவான் . க. கதிசேரன் எம்.ஏ., பி.எட்.,

பூவாளூர்

தவத்திரு. கஜபூசைச் சுந்தரசுவாமிகள்

தமிழாய்வு மையம்

கௌமார மடாலயம், சின்னவேடம்பட்டி,

கோயமுத்தூர் - 641 049

21.05.2010

திரு. ப.சு. சின்னசாமிக்கவுண்டர் நினைவு

அறக்கட்டளை ஆய்வுரைகள்

(மூன்றாம் ஆண்டு)

சொற்பொழிவாளர்கள்

வேல்தடக்கைச் செம்மலார்

(தணிகைப் புராண அறிமுகம்)

சித்தாந்தச் செழுங்கதிர்

பேரா. முனைவர் ந.இரா. சென்னியப்பனார்

பேரூர், கோவை- 10

குன்றக்குடி மயூரகிரிநாதர் பிள்ளைத்தமிழ்

குன்றக்குடி ஆதீனப் புலவர்

சிந்தாந்தச் செல்வம்

வித்துவான் . **க. கதிசேரன்** எம்.ஏ., பி.எட்.,

பூவாளூர்

தவத்திரு. கஜபூசைச் சுந்தரசுவாமிகள்

தமிழாய்வு மையம்

கௌமார மடாலயம், சின்னவேடம்பட்டி,

கோயமுத்தூர் – 641 049

21.05.2010

சிரவைக் கௌமார மடாலய வெளியீட்டு எண் : 289

நூல் பெயர் : திரு. ப.சு.சின்னசாமிக்கவுண்டர் நினைவு அறக்கட்டளை ஆய்வுரைகள் III
1. தணிகைப்புராண அறிமுகம்
2. குன்றக்குடி மயூரகிரிநாதர் பிள்ளைத்தமிழ்

சொற்பொழிவாளர்கள் : 1. பேரா. முனைவர் ந.இரா. சென்னியப்பனார்
2. வித்துவான் க. கதிரேசன்

நாள் : 21.05.2010

படிகள் : 500

விலை : ரூ. 30/

வடிவமைத்து அச்சிட்டோர் : சௌமி அச்சகம்
69-D, சிறுவாணி மெயின் ரோடு
பேரூர், கோவை-641 010.
போன் : 98422-52779

நூல் கிடைக்குமிடம் :
தலைவர்
சிரவணபுரம் கௌமார மடாலயம்,
சின்னவேடம்பட்டி (அ.நி),
கோவை-641 049.
தொலைபேசி: 2666370.

ஆசியுரை

தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்
ஆதீனத்தலைவர், கௌமார மடாலயம்

மிகப் பரவலாக அறியப்படாமல், சிலரால் மட்டுமே அறியப்பட்டிருந்த சிரவணபுரம் கௌமார மடாலயத்தின் புகழ் திக்கெட்டும் பரவும்படி அருட்செங்கோல் ஓச்சியவர் எம் குருநாதராகிய தவத்திரு. கஜபூசைச் சுந்தர சுவாமிகள். அவருடைய சமய இலக்கியப் பணிகள் பொன்னெழுத்துக்களால் பொறித்துப் போற்றத்தக்கவை. அச் சுவாமிகளின் நல்லருளால் சிரவை ஆதீனத்தின் சமய, இலக்கிய, சமுதாயப் பணிகள் நாளும் பலரும் போற்ற வளர்ந்து கொண்டுள்ளன. இவை தொய்வின்றித் தொடர்ந்து நடைபெற வேண்டி எம் குருநாதரின் புனிதத் திருப்பெயரால் நிறுவப்பெற்றது தவத்திரு. கஜபூசைச் சுந்தர சுவாமிகள் தமிழாய்வு மையம்.

தமிழ்மொழி, உலகச் சமயங்கள், தத்துவச் சிந்தனைகள் பற்றிய மிகப் பெரிய ஆய்வு நூலகம் ஒன்றை உருவாக்குதல், சிரவை ஆதீனத் தொடர்புடைய பல்வகை இலக்கியங்களுக்கும் நல்ல பதிப்புகளைக் குறைந்த விலையில் வெளியிடுதல், அந்நூல்களைச் சமய இலக்கிய ஆர்வலர்களுக்கு அறிமுகப்படுத்துதல், இந்த நூல்களை மையமாகக் கொண்டு பல்கலைக்கழக ஆய்வேடுகள் மலர ஆவன செய்தல், கருத்தரங்கங்கள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் என இத்தமிழாய்வு மையம் மொழிப்பணி புரிந்துவருகிறது.

போற்றுதலுக்குரிய எம் குருநாதரிடம் ஆதீன உயர்நிலைப் பள்ளியில் தமிழ் கற்கும் பெரும்பேறு வாய்த்தவரும், கல்வித்துறையில் பல்வேறு நிலைகளில் சிறப்பாக அரசுபணி ஆற்றியவரும், ஆதீனத்தின் உழுவல் அன்பருமாகிய முனைவர். திரு. கே. குமாரசாமி அவர்கள் தம் மாமனார் அமரர். ப.சு. சின்னசாமிக் கவுண்டர் அவர்களின் நினைவாக இந்த அறக்கட்டளையை நிறுவியுள்ளார். சொற்பொழிவுகள் சுவாமிகளின் குருபூசையை ஒட்டி நிகழ வேண்டும் என்பதுவும், அவை முருகனைப் போற்றும் நூல்களின் அடிப்படையில் அமைய வேண்டும்

என்பதுவும், அவை நூலாக்கப்பட்டு அன்றே வெளியிடப்பட வேண்டும் என்பதுவும் ஏற்பாடு. அவ்வகையில் இதுவரை இரண்டு ஆண்டுகள் நடந்து முடிந்துள்ளன; இது மூன்றாம் ஆண்டு.

இந்த அறக்கட்டளையை நிறுவியுள்ள தமிழக அரசின் மேனாள் கல்லூரிக் கல்வி இயக்குநரும், பாலத்துறைக் கலைவாணி கல்வியியல் கல்லூரியின் செயலாளரும் ஆகிய பாராட்டிற்குரிய முனைவர். கே. குமாரசாமி அவர்களும் அவருடைய இல்லத்தார் எல்லோரும் இறைவன் திருவருளாலும் குருவருளாலும் அனைத்து நன்னலங்களும் நிறைவுறப் பெற்று நீடினிது வாழ வாழ்த்துகிறோம்.

இவ்வாண்டு சித்தாந்தச் செழுங்கதிர் முனைவர் ந.இரா. சென்னியப்பனார் அவர்கள் வேல்தடக்கைச் செம்மலார் என்னும் தலைப்பில் துறைசைக் கச்சியப்ப முனிவரின் தணிகைப் புராணத்தை அறிமுகப்படுத்துகிறார். சிறந்த போதகாசிரியர், உயர்ந்த சொற்பொழிவாளர், சைவ சமயச் சடங்குகளை இனிது நிறைவேற்றித் தரும் வேள்வி ஆசான் என்னும் பல நிலைகளோடு இப்பொழுது பல சிற்றிலக்கியங்களைப் படைக்கும் பெருங்கவிஞராகவும் புகழீட்டி வருகிறார். இவருடைய சொற்பொழிவு தணிகைப் புராணத்தை அறிமுகப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அடுத்து, குன்றக்குடி ஆதீனப்புலவர் சித்தாந்தச் செல்வம் வித்துவான் க. கதிரேசன் அவர்கள் குன்றக்குடி முருகன் பிள்ளைத்தமிழை அறிமுகம் செய்து வைக்கிறார். மயூரநாதர் பிள்ளைத் தமிழ் என வழங்கப்படும் இப்பனுவல் மழைவை. சுப்பிரமணிய பாரதியார் என்னும் கவிஞரால் இயற்றப்பட்டுள்ளது. ஒரு முறை பதிப்பாகியுள்ள போதிலும் இப் பனுவல் பரவலாக அறியப்படாதது. எனவே இந்த அறிமுகப் பொழிவு காலத்திற்கேற்ற ஒரு தேவையாக அமைந்துள்ளது.

அருமையான இந்த சொற்பொழிவுகளை நிகழ்த்துகின்ற அறிஞர் பெருமக்கள் இருவரும் எம் வழிபடு கடவுளாகிய செந்தமிழ்க் கந்தனின் திருவருளாலும், குருவருளாலும் அனைத்துவகைப் பெருமைகளையும் குறைவறப் பெற்றுப் பெரும்புகழுடன் நீடினிதுவாழ எம் குருநாதரின் திருவடித்தாமரைகளை நெஞ்சினில் நிறுத்தி வாழ்த்துகின்றோம்.

தமிழாய்வுமையப் பணிகள் தொய்வின்றித் தொடர்ந்து சிறப்பாக

நிறைவேற நம் ஆதீனக்கவிஞர். பெரும்புலவர் ப.வெ.நா. அவர்கள் உறுதுணையாக இருக்கிறார். அவருடைய பரந்த அநுபவமும், உழைப்பும், ஊக்கமும் மிகவும் பாராட்டுதற்குரியன. புலவர். ப.வெ.நா. அவர்களுக்கு எம் பாராட்டுக்கள்.

கௌமார மடாலயத்தின் அச்சுப்பணிகள் அனைத்தையும் மிகுந்த ஈடுபாட்டுடன் செம்மையாக நிறைவேற்றி, கலைநயம் மிக்கனவாக வடிவமைத்துக் கொடுப்பவர் நம் ஆதீனத்தின் வழிவழி அன்பராகிய திரு. தே. திருஞானசம்பந்தம் அவர்கள். இந்த ஆய்வுரைகளை எழில் மிக்க புத்தகமாக ஆக்கிக் கொடுத்த பாராட்டிற்குரிய தே.திருஞானசம்பந்தம் அவர்களுக்கும், பேரூர் சௌமி அச்சக அன்பர்கள் எல்லோருக்கும் எம் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்து மகிழ்கிறோம்.

கல்விப் பணிகளினால் கற்றவர்கள் போற்றவளர்
செல்வக் குமாரசாமி செய் அறத்தால் - பல்விதமாம்
நற்பனுவல் மாட்சிஎலாம் நாடறியக் காட்டுநலம்
அற்புதமே என்பதுண்மை ஆம்.

முன்னுரை

அண்மையில் சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் கர்னல். முனைவர். கு. திருவாசகம் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் உரையாற்றும்போது, "புகட்டும் கல்வி, மனிதனை உருவாக்குகிற கல்வியாக – விழுமியங்களைப் போதிக்கிற பாடங்களாக, ஒரு பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தில் இருக்கிறதா என்பதை அறிய வேண்டியது நமது கடமை. எங்கள் பாடங்கள் மனிதனை உருவாக்குபவை என்று நான் ஏற்க மாட்டேன். எங்கள் பாடங்கள் உயிரோட்டமான மதிப்பீடுகளை வழங்கும் பாடங்கள் எனவும் ஏற்றுக் கொள்ள மாட்டேன்." எனப் பேசியுள்ளார். இன்றைய உலகியற் கல்வியின் உண்மையான நிலை இதுதான்.

இதற்கு வேறுபட்ட கல்விக் களமாக இருப்பது தாய்மொழி இலக்கியம், சமயம் சார்ந்த பத்தி, தத்துவச் சிந்தனைகள் முதலியன ஆகும். இவை மனிதனை உருவாக்குகிற – விழுமியங்களைப் போதிக்கிற – துறைகள் ஆகும். இதனைத் தெளிவாக உணர்ந்து தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை முடிந்த அளவு தொகுத்து அடுத்த தலைமுறைக்காகச் சேமித்து வைப்பதுதான் தவத்திரு. கஜபூசைச் சுந்தர சுவாமிகள் தமிழாய்வு மையத்தின் முதன்மைப் பணி. இந்த ஆய்வு மையம் நூலகம், நூற்பதிப்பு, சொற்பொழிவுகள் எனப் பல துறைகளில் பணியாற்றி வருகிறது.

உயர்திரு. முனைவர். கே. குமாரசாமி அவர்கள் தம் மாமனார் அமரர் திரு. ப.சு. சின்னசாமிக் கவுண்டர் அவர்களின் நினைவாகக் கௌமார மடாலயத்தில் ஆண்டுதோறும் ஆய்வுச் சொற்பொழிவுகள் திகழ அறக்கட்டளை ஒன்றினை நிறுவியுள்ளார்.

இவ்வறக்கட்டளையின்கீழ் இது வரை இரண்டு ஆண்டுகள் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. இது மூன்றாம் ஆண்டு. மணிவாசகர் அருட்பணி மன்றத்தின் தலைவர் பேராசிரியர். முனைவர். ந.இரா. சென்னியப்பனார் அவர்களும், குன்றக்குடி ஆதீனப் புலவர் வித்துவான் க. கதிரேசன் அவர்களும் இச்சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளனர்.

பேரா. ந.இரா. சென்னியப்பனார் அவர்கள் நாடறிந்த நற்றமிழ் அறிஞர். சைவ சித்தாந்தத்திலும் தமிழ் இலக்கணத்திலும் நிகரற்ற

புலமை உடையவர். மொழித்துறைக்கு இணையாகச் சைவ வழிபாட்டுக் துறையிலும் ஆக்கபூர்வமாகத் தொண்டாற்றி வருகிறார். இவர் கவிராக்ஷஸ எனப் போற்றப்படும் கச்சியப்ப முனிவரின் உயர்ந்த படைப்பாகிய தணிகைப் புராணத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

மதிப்பிற்குரிய வித்துவான் க. கதிரேசனார் அவர்கள் குன்றக்குடி ஆதீனப்புலவர். அந்த ஆதீனத்தின்வழி பல நூல்களை வெளியிட்டுள்ளவர். ஏராளமான கருத்தரங்கங்களிலும் இலக்கிய மலர்களிலும் கட்டுரைகளை வழங்கிவருபவர். சித்தாந்தச் செல்வம் எனப் போற்றப்படுபவர். இவர் மழவை சுப்பிரமணிய பாரதியாரால் இயற்றப்பெற்றுள்ள குன்றக்குடி மயூரகிரிநாதர் பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கியத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இப் பேராசிரியப் பெருமக்கள் இருவருக்கும் சிரவையாதீனத்தின் சார்பில் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த அறக்கட்டளையை நிறுவியுள்ள என் பேரன்பிற்குரிய முனைவர். கே. குமாரசாமி அவர்களுக்கும், தமிழாய்வு மையத்தை உள்ளிட்ட பல்வேறு சமுதாய, சமய, மொழிப்பணிகளில் பேரீடுபாடு கொண்டு அனைத்தையும் சிறப்பாகப் பரிபாலித்துவரும் சிரவை ஆதீனகர்த்தர் அவர்களுக்கும் நன்றியை விதந்துரைத்தல் மிகை. எனினும் நல்லாரைப் போற்றவாய்த்த ஒரு நல்வாய்ப்பாகக் கொண்டு தமிழாய்வு மையத்தின் சார்பில் என் நன்றியை உரித்தாக்கி உவகை கொள்கிறேன்.

சிரவை ஆதீனப் புலவர் திரு. கு. சிவலிங்கம் அவர்கள் ஆய்வு மையத்தின் இணைச் செயலராக அரும்பணி ஆற்றுகிறார். மையத்தின் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் அமைப்பாளராக அமைந்து நிறைவேற்றி வருகிறார். அவருக்கு என் நல்வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இச் சொற்பொழிவுகள் இனிது நிறைவேறவும் நூல்வடிவம் பெறவும் உழைத்த அனைவருக்கும் சிரவையாதீனத்தின் சார்பில் என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ப.வெ. நாகராஜன்
செயலாளர்
தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள்
தமிழாய்வு மையம்

கௌமார மடாலயம்
14-4-2010

சிரவையாதீனம் மூன்றாவது குருமகாசந்நிதானம்

தவத்திரு. கஜபூசைச் சுந்தர சுவாமிகள்

குன்றக்குடி மயூரகிரி நாதர் பிள்ளைத் தமிழ்

குன்றக்குடி ஆதீனப்புலவர்
சைவத்தமிழ்மணி, சித்தாந்தச் செல்வர்
வித்துவான் **க. கதிரேசன்** எம்.ஏ., பி.எட்.,
பூவாளூர்

முருகப் பெருமானின் குன்றுதோறாடல் திருத்தலங்களுள் குன்றக்குடியும் ஒன்று. இது, "குன்றுதோறாடலின் முந்தியதாகிய குன்றக்குடி"; "குன்றுதோறாடலின் உயர்ந்தது எனப் பெரியோர் விளம்பு குன்றக்குடி"; "குன்றிலுயர் குன்றக்குடி" என்று வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் போற்றிய தலம். இத்தலம் – குன்று – மயில்வடிவானதாதலின் இதனை மயில்மலை, மயூரகிரி, சிகண்டிமலை, சிகிமலை என்று இலக்கியங்கள் குறிக்கின்றன.

இங்கு அருள்தரு சண்முகநாதப் பெருமான், குன்றின் உச்சியில் தனிமயிலில், இரு தனித்தனி மயில்களில் இருமயிலார் இருபுடையும் சூழ எழுந்தருளியுள்ளான். ஆறுதிருமுகங்கள், பன்னிரு திருக்கைகள் தாங்கி அருளை வாரி வழங்கும் இவனை அருணகிரிநாதர், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் முதலிய அருளாளர்களும், மழவராயனேந்தல் சுப்பிரமணிய பாரதியார் முதலிய புலவர் பெருமக்களும் திருப்புகழ், கலம்பகம், பதிகங்கள், பிள்ளைத்தமிழ், உலா, தலபுராணம் முதலிய நூல்களால் போற்றிப் பரவியுள்ளனர்.

குன்றக்குடியிலுள்ள ஞானப் பண்ணையான உலகு போற்றும் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், சகலாகம பண்டிதர் என்று போற்றப் பெறும் அருணந்தி சிவாசாரியாரிடம் உபதேசம் பெற ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகளால் (கி.பி. 1250 – 1325) திருவண்ணாமலையில் கி.பி. 1310 இல் நிறுவப் பெற்றது. இது சிவகங்கை மன்னர்களின் வேண்டுகோளுக்கிணங்க பிரான்மலையிலும், பிறகு குன்றக்குடியிலுமாகக் கால்கொண்டது. இன்று இந்த ஞானபீடத்தில் எழுந்தருளி 46ஆவது குருமகாசந்நிதானமாக திருப்பெருந்திரு தெய்வசிகாம பொன்னம்பலதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சி புரிந்துவருகிறார்கள். இவ்வாதீனத்தின் ஐந்து திருக்கோயில்களுள்

ஒன்று, குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருக்கோயில்.

நாம் குன்றக்குடிக் குன்றில் ஏறும் படிப்பாறையின் நிலப்பகுதியில் வண்ணச்சுதைச் சிற்பங்களுடன் கூடிய மூன்று குடைவரைகளும், அவற்றின் முன்னே கற்றளிகளாக அருள்தரு அழகுடைய நாயகி உடனாய தேனாற்று நாதர் திருக்கோயிலும், இவற்றின் பின்புலத்தில் ஞானியார் மலைக்குன்றில் சமணர் படுக்கைகளும் உள்ளன. இவையனைத்தும் தொல்பொருள் துறையின் பராமரிப்பில் உள்ளன.

குன்றக்குடி மயூரகிரிநாதர் பிள்ளைத்தமிழை இயற்றியவர் மழவராயனேந்தல் சுப்பிரமணிய பாரதியார் என்பவர். ''வைகைநாட்டு மழவராயனேந்தல்'' என்று இந்நூலின் சிறப்புப் பாயிரம் குறிக்கும் இவ்வூர், மானாமதுரைக்கு அருகில் திருப்புவனத்துக்குத் தெற்கில் உள்ளது. சுருக்கமாக மழவை என வழங்கப்படும். பாரதியார், தமிழோடு வடமொழியும் அறிந்தவர். இலக்கணம் வல்ல புலவர்களின் தலைமணி அட்டாவதானி, நாற்கவி வித்தகர். அந்நாளைய தனுஷ்கோடி, இராமேசுவரம் மன்னர்களால் பாராட்டப்பெற்ற இவருக்குத் தஞ்சைமன்னன் சிவிகைப்பரிசு வழங்கினான். பெறுதற்கரிய பேறுகள் பெற்ற இவர்க்கு மகப்பேறில்லை. மகப்பேறு வேண்டி, குன்றக்குடியானை நோக்கி நோன்பிருந்து, மலைவலம் வந்து, மலை ஏறி, பெருமான் திருமுன்பு இருந்து அன்றைய ஒரே பகலில் பிள்ளைத்தமிழை இயற்றினார். இப் பிள்ளைத் தமிழுக்கு உகந்த பிள்ளைப் பெருமான் இரு ஆண் மக்களை அருளினான். இவர் காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி. இவை இந்நூலின் நான்கு சிறப்புப் பாயிரங்கள் தரும் செய்திகளாகும்.

பிள்ளைத்தமிழ் இலக்கணக் கூறுகள் நாமனைவரும் அறிந்தனவேயாதலின் நூலைச் சுவைப்போம்.

பொருளுரை:

1. **ஒருபுதுமை :**

நூலுக்கு முதற் செய்யுள் விநாயகர் வணக்கம் என்ற வழக்கத்துக்கு ஏற்ப, நம் பிள்ளைத்தமிழும் விநாயக வணகத்துடன் தொடங்குகிறது. அடுத்து வரும் காப்புப் பருவத்துப் பத்துச் செய்யுட்களும் குன்றக்குடியானைக் காக்குமாறு மட்டுமே அமையாமல் இருதிறத்தனவாக உள்ளன.

இதன் 2, 3, 5 ஆகிய என்னுள்ள செய்யுள்கள் முறையே அப்பன், அம்மை, விநாயகர் ஆகியோரை,

"குன்றக்குடிக் குமரனைப் புரக்க"
"கந்தனைத் தனிபுரக்க"
"கந்தனைக் காக்கவே"

என்று வேண்டுகின்றன.

எஞ்சிய 1, 4, 6 – 10 செய்யுட்கள் முறையே சுப்பிரமணியர், திருமால், இலக்குமி, பிரமன், கலைவாணி, பல தேவர்கள் ஆகியோரை நோக்கி முறையே,

"நின்கவிக்கு நீகாப்பே"
"குருபரன் தமிழ் புரக்க"
"என் தமிழ் புரக்க"
"என் ஐயன் முத்தமிழ் புரக்க"
"மயூரகிரித் தலைவன் மீதில் தமிழ் புரக்க"
"முருகன் கவி புரக்க"

என்று பிள்ளைத்தமிழைக் காக்குமாறு வேண்டுகின்றன.

சுப்பிரமணியரை நோக்கி "நின்னைக் காத்துக் கொள்க" என்று வேண்டுவது பொருத்தமற்றது; ஆதலால் "நின் கவிக்கு நீ காப்பே" என்றது பொருந்தும்

திருமால் முதலிய பிறரிடம் முருகனைக் காக்குமாறு வேண்டாது, பிள்ளைத்தமிழைக் காக்குமாறு வேண்டக் காரணம் என்ன? திருமால் முதலியோர், அசுரர் பகை காரணமாக அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரும் தொழுத கையினருமாக அசுரர்க்கு அடிமைப்பட்டுக் கிடந்தவர்கள். அசுரர்களைத் தடிந்து இவர்களை மீட்டு, அவரவர் பதவிகளில் அமர்த்தியவன் முருகன். அடலேறான இவனைக் காக்குமாறு அடிமைப்பட்டுக் கிடந்தவர்களை வேண்டுவது பொருந்தாது என்பதாலும், மரபு பேணவேண்டிய நிலை கருதியும் முருகனைக் காக்குமாறு வேண்டாது, பிள்ளைக்கவியைக் காக்குமாறு வேண்டுகிறார். இது பாரதியாரே கூறும் காரணமாகும்.

இதனை மற்றொரு வகையிலும் நாம் சிந்திக்கலாம். மெய்ப்பொருளியல் நோக்கில் தேவர்கள் அனைவரும் பிறப்பு இறப்புகளில் சுழலும் பசுவர்க்கத்தினரே.

"நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்
ஈறுஇ லாதவன் ஈசன் நேடுவனே" (தேவாரம் 5 - 100 - 3)
என்பார் அப்பரடிகள்.

இதனை வழிமொழியும் குமரகுருபர அடிகள், தேவர்களைச் "செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள்" என்றும் முருகனை அவர்கட்கு "மணவாளன்" என்றும் கூறுகிறார்.

"செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள"
என்ற தொடர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்ச் செங்கீரைப் பருவத்தின் முதல் ஐந்து செய்யுள்களின் மகுடமாக அமைந்துள்ளது.

மணவாளன் என்னும் சொல்லாட்சி அற்புதமானது. மெய்ப்பொருளியல் நோக்கில் பரம்பொருள் ஒருவனே ஆண்பால், பிற தெய்வங்கள் அனைத்தும் முடிவில் பரம்பொருள் வழங்கும் இன்பம் துய்க்க வேண்டிய பெண்பாலாகிய உயிரினத்தனவாதலின் முருகனை மணவாளன், செத்துப்பிறக்கின்ற தெய்வங்களுக்கு வாய்த்த சாவாநிலையினனாகிய கணவன் என்றார் என்பது ஒருநோக்கு

பிறிதொரு நோக்கில் மணம் என்பது நன்னிலை என்று பொருள் தருவது. பிற தெய்வங்களுக்கு உரிய நன்னிலைகளை பதவிகளை அருள்கின்றவன் முருகன் என்ற பொருளில் அவனை "மணவாளன்" என்றது பொருந்தும்.

இனிப் பாரதியார் செய்யுளைக் காண்போம்.

"பூமேவு தடங்கடல்சூழ் புவியாகி அகண்ட
பூரணமாய்க் காரணமாய் ஆரணமும் ஆகிக்
காமேவு நறும்பொழில்சூழ் மாயூர கிரிவாழ்
கடவுளே நின்கவிக்குக் காப்பு எவரை உரைப்போம்
நாமேவு கலைவாணி நாதனுக்கும் அரற்கும்
நளினமலர் விழியாற்கும் நாகநாட்டு இறைக்கும்
தேமேவு வானவர்க்கும் அசுரர்பகை தடிந்த
செல்வன் நீ அதனால் நின் கவிக்கு நீ காப்பே." - காப்பு.1

பிரமன் முதலியோர் அசுரர்பகையால் அடிமைப்பட்டவர்கள், நீ அவர்களின் பகை தடிந்த செல்வன் என்றுப் பிறரின் தகுதியின்மையும்

முருகனின் தகுதியையும் காட்டி, "நின்கவிக்கு நீ காப்பே" என்று தேற்றேகாரம் தந்து கூறுகிறார்.

முருகனுக்குரிய தகுதியாக "அசுரர் பகை தடிந்த செல்வன்" என்று கூறும் இவர், அவனுக்குரிய பரம்பொருள் தகுதிகளாகிய புவியாதல் அகண்டமாதல், பூரணமாதல், காரணமாதல், ஆரணமாதல், மற்றும் அனைவரையும் அனைத்தையும் கடந்தும் கடவியும் நிற்கும் கடவுளாதல் ஆகிய தகுதிகளைச் செய்யுள் முற்பகுதியில் குறிக்கிறார். இதனால் பிற தேவர்கள் இத்தகுதிகளுள் யாதொன்றும் இல்லாதவர்கள் என்பது குறிப்பு.

முருகனைக் காக்குமாறு ஞானத்திருவுருவாய் விளங்கும் சிவபெருமானை முதல் செய்யுளில் வைக்காமல், முருகனை முதலிலும் சிவபெருமானை அடுத்தும் வைத்து வேண்டியுள்ளது ஏன்? முருகன் வேறு சிவபெருமான் வேறல்லர் ஆதலாலும், என்றும் ஞானபண்டிதனாதலாலும் எனலாம். மேலும், சிவபரம்பொருள் ஞானத்திருவுருவினது. இதுவே அதன் உண்மையுரு – சொரூப நிலை. அப்பரம்பொருள் சராசரம் காத்தற்குக் கொண்ட சார்புத்திருவுரு – தடத்த நிலை – முருகன் திருவுரு. ஆதலால் அனைத்தையும் காக்கச் சிவம் எடுத்த திருவுருவாகிய முருகனை முதற் செய்யுளில் கூறி வேண்டினார் எனவும் பொருந்தும்.

2. சுபுத்திரன் :

"சு" என்னும் வடமொழி முன்னொட்டு சுகம், நன்மை என்ற பொருள் தருவது. எனவே "சுபுத்திரன்" என்ற சொல் நன்மைகளை எல்லாம் ஒருசேர உடைய மகன் என்றும், நன்மைகளை எல்லாம் ஒருசேர வழங்குகின்ற மைந்தன் என்றும் பொருள் தருவது.

"ஐந்து முகத்தினர் தந்த சுபுத்திர" - (செங்கீரை. 10)

என்று முருகனை விளக்குகிறார் மழலைப் பாரதியார்.

"அந்திக்கு நிகர்மெய் அண்ணல் அருள்புரிந்து அறிஞ ராயோர்
சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்"

என்றும்,

சிற்பரன் தான்கொண் டுள்ள திருமுகம் ஆறு தன்னில்
பொற்புறு நுதற்கண் தோறும் புலிங்கம்ஒன் றொன்று தந்தான்
- கந்தபுராணம் 1 - 11 -43, 44

என்றும் சிவபெருமானது நுதற்கண்கள் வெளிப்படுத்திய தீப்பொறிகள் முருகனானதைப் புராணம் கூறும்.

குமரகுருபர அடிகள் தனது நோக்கில் அன்னை உமையவள் முருகனுக்கு ஈன்றதாய் அல்லள், செவிலித்தாயே என்கிறார். காரணம் என்ன? பாடலைப் பார்ப்போம்.

"செழுமறை தெளியவ டித்தத மிழ்ப்பதி கத்தோடே
திருவருள் அமுதுகு ழைத்து விடுத்தமு லைப்பாலால்
கழுமல மதலைவ யிற்றைநி ரப்பிம யிற்சேயைக்
களிறொடும் வளரவ ளர்த்த அருட் செவிலித்தாயே"
(மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ். சப்பாணி.10)

முருகனுக்கு அன்னை பராசத்தி செவிலித்தாய் என்றதால் பெற்றவர் ஆண் ஆகிய சிவபெருமானே என்ற குறிப்பும் உளது.

3. கருவுயிர்த்த சிவன் நிலை என்ன?

ஐந்து முகத்தினர் தந்த சுபுத்திரன் முருகன் என்பதை வேறு ஒரு வகையிலும் சுட்டுகிறார் மழவையார். உலகியலில் சூல்கொண்டாரது மார்புகள் திரண்டு அமையும்; அவற்றின் கண்கள் கருமை நிறம் பெறும்; அவர் மதிமுகம் வெளுக்கும்; கருவுற்றார் மண் உண்ண விரும்புவர்; அவர் வயிறு பூரிக்கும்; ஈனும் முன்னும், ஈனுங் காலையும் வயிறு உளையும். இவற்றில் யாதொரு அறிகுறியும் நிகழாமலேயே சிவபெருமானுக்கு முருகன் பிறந்தான் என்கிறார் கவிஞர்.

"வடபொலன் கிரிஎனும் முலைக்கண் கறாது, ஒளிரும்
மதிமுகம் வெளுத்திடாது,
மண்அருந் தாது, அகடு பூரித்தி டாது, நெடு
மணிவயிறு உளைந்திடாது
குடவளைகள் குமுறவரு சரவணையில் நிலவு பொழி
கோடிசூரிய கிரணமோர்
குலவுதிரு வுருஎடுத் தென்னவரு குன்றாக்
குடிக்குமர னைப் புரக்க"

(காப்பு. 2)

என்பது பாடல் பகுதி.

சிவபெருமானின் நுதற்கண்கள் வெளிப்படுத்தியன தீப்பொறிகள் அல்லவா? எனவே அவை வெப்பம் மிக்கனவாக மட்டுமல்லவா இருக்க வேண்டும்? அப்பொறிகள் கோடி சூரிய கிரணம் தான்.

ஆயினும் அக்கிரணம் வெப்பம் உமிழாது நிலவைப் பொழிந்தது என்கிறார். உலக நல்வாழ்வுக்கு ஞாயிற்றொளியும் திங்கள் ஒளியும் இன்றியமையாதன. எனவே அண்ட சராசரம் காக்க வந்த முருகப்பெருமான் "நிலவுபொழி கோடி சூரிய கிரணம் ஓர் திருவுரு எடுத்தாற் போன்று" இரு திறனும் சேர அவதரித்தான் என்கிறார்.

4. செழுஞ்சுடர் :

பரம்பொருள் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூவகை நிலைகளில் அருள் புரிவது மட்டுமன்றி, ஞானவடிவில் நின்றும் அருள்புரிவது. இதனை,

"அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவம் உடையான் உளன்"

(திருவருட்பயன். 5)

என்பார் உமாபதி சிவனார்.

அறிவே உருவாம் ஞானத்திருவுருவைச் செழுஞ்சுடர் உருவமாகக் கூறுவதுண்டு. ஏன்? ஞானமும் செழுஞ்சுடரும் இருள் தீர்த்து ஒளி நல்குவன. செழுஞ்சுடர் புற இருள் தீர்த்துப் பொருள் விளங்கச் செய்வது; ஞானம் உயிரின் அக இருள் தீர்த்து உயிர் விளக்கம் பெறச் செய்வது.

மேலும் பொருள் புலப்பாட்டுக்கு உதவும் ஒளி நம் கண்களுக்குப் புலப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக ஞாயிற்று ஒளி, பொருள்களைப் புலப்படச் செய்கிறது; ஆனால் பொருள்மீது வந்து படும் அதன் ஒளியை நாம் காணமுடிவதில்லை. மெய்ப்பொருளை விளக்கும் ஞானமும், உலகியற் பொருளை விளக்கும் ஒளியும் கண்ணாற் காண இயலா நுண்பொருள்கள். நுண்பொருளாய் விளங்கும் செழுஞ்சுடரின் அடிமுடி காண முற்பட்டுத் தோற்ற செய்தி கூறுவதே மாலும் நான்முகனும் சிவபரம்பொருளின் அடிமுடி காண முற்பட்டது.

பரம்பொருளாகிய சோதியை; ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி என்பார் வாதவூரடிகள். "ஆதியில்லாச் சோதி", "அந்தம் இல்லாச் சோதி" "அருஞ்சோதி", "பெருஞ்சோதி" என்று அடைமொழிகளைச் சோதியுடன் தனித்தனியே கூட்டிச் சோதியின் இயல்புகளை அறிய வேண்டும். திருவெம்பாவையில் வரும் இத்தொடர் பிள்ளைத்தமிழில்

"ஆதியொடு அந்தம் இலாத செழுஞ்சுடர் ஆடுக செங்கீரை"

(செங்கீரை. 6)

என்று வெளிப்படுகிறது.

5. தமிழ் உமை :

பெற்றோருள் தாய்க்கு முதலிடம் தந்து போற்றுவது தமிழ் மரபு. ஆறு, நாடு, மொழி இவற்றைத் தாயாகப் போற்றுவதும் இம்மரபு பற்றி வந்ததே.

"அம்மையே அப்பா"
என்று திருவாசகமும்,

"அம்மையோடு அப்பனாகிச் செறிவு ஒழியாது நின்ற சிவம்"
என்று சிவஞான சித்தியாரும்,

"சத்தி இருந்தால் செய்; இல்லையேல் சிவனே என்று கிட"
என்று பழமொழியும் தாயின் சிறப்பை வலியுறுத்துவன.

இவ்வுலக நல்வாழ்வுக்கு மட்டுமன்றி, வீடு பேறாகிய வற்றாமுற்றாப் பேரின்பப் பெருவாழ்வுக்கும் வழிவகை செய்து நம் உயர்வு ஒன்றே கருதுகின்றவள் அன்னை பராசத்தி.

காரிட்ட ஆணவக் கருவறையிலே கிடக்கும் கண்இலாக் குழவியைப் போல் கேவலத்தில் கிடந்த நம்மீது கருணை காட்டி உடல், கருவிகள், உலகு, நுகர்பொருள்கள் ஆகிய அனைத்தையும் அருளி, நமக்கு ஈடேற்றப் பணிபுரிகின்றவள் அன்னை பராசத்தி. எனவேதான் குமரகுருபரர் மீனாட்சியம்மையை,

"அருள்சூல் கொண்ட அங்கயற்கண் அமுதே"
என்று தாலப்பருவத்தின் ஐந்து செய்யுள்களில் மகுடம் அமைத்துப் போற்றுகிறார்.

பெருமான் நமக்கு வழங்கவுள்ள வீட்டின்பத்துக்கு முன்னதாக, முற்பட்டு நமக்கு அருள்பாலிக்கின்றவள் பராசத்தியே என்பதை,

"முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருள்"

(திருவெம்பாவை - 16)

என்பது நன்கு புலப்படுத்தும்.

இனிய திருவருளை முன்னி முன் சுரக்கும் அவள், அதனைச் சுரக்கும் முறைமையை வாகீசர்,

"பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளை"

(திருவெம்பாவை.14)

என்பார். "நம்மைப் பேதித்தலாவது, மறைப்புச் சத்தியாய் வினைப் போகத்துள் அழுத்துதல்; வளர்த்தலாவது வினைக்கீடாக இன்பதுன்பங்களை நுகரச் செய்தல்; எடுத்தலாவது வினைச் சுழலில் ஆழ்ந்து போகாதவாறு கை கொடுத்துத் தூக்குதல்" எனத் தண்டபாணி விருத்தியுரை (ப. 459) இதனை விளக்குகிறது.

இங்ஙனம் நம் நல்வாழ்வு ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு இம்மை, மறுமை, அம்மைகளில் அருளும் அன்னை பராசத்தியைத் தமிழ் – இனிமை என்ற அடைமொழியால் சிறப்பிக்கின்றார் மழவைப் பாரதியார்.

"தமிழ் உமைக்கும் சுரநதிக்கும் தனயன்" **- முத்தம் 8**

என்பது அது.

6. எளிமைக்காரன் :

இறைவனை "மலர்மிசை ஏகினான்" என்பார் தெய்வப்புலவர். இதற்கு, "அன்பான் நினைவானது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின் ஏகினான் என இறந்தகாலத்தாற் கூறினார். என்னை? வாராக் காலத்தும் நிகழும் காலத்தும் ஓராங்குவரூம் வினைச் சொற்கிளவி இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்" விரைந்த பொருள என்மனார் புலவர் "(தொல். சொல். வினை.14) என்பது ஓத்தாகலின்" என்று விளக்கம் தருவார் பரிமேலழகர்.

இறைவனை நாம் நினைத்தலும், அவன் நம் உள்ளத்தில் எழுந்தருளுதலும் ஆகிய இரண்டும் உடனிகழ்ச்சிகள். அத்துணை எளியன் அவன்.

எங்கிருந்து அவனை நினைத்தாலும் அவன் அவ்விடத்து அவரிடம் இருக்கின்றான் என்பதை

"எவ்விடத் தவர்உனை எண்ணினர் நீயும்மற்று
அவ்விடத்து உளை எனற்கு ஐயம் வேறுஇன்றே"

(சிதம்பரமும்மணிக்கோவை 11)

என்றும்,

எளியருக்கும் எளியனாகிய அவன் அன்பர்பால் பெருங்கருணை கொண்டவன் என்பதை

"எளியரின் எளியர் ஆயினர்
அளியர் போலும் அன்பர்கள் தமக்கே"

திருவாரூர் நான்மணிமாலை37

என்றும் குமரகுருபர அடிகள் வியந்து போற்றுகிறார்.

இச்செய்திகளை எல்லாம் உள்ளடக்கி,

"எண்ணிய வேளையின் நண்ணிய ஆரண"

- சப்பாணி.9

என்று இப்பிள்ளைத் தமிழுடையார் கூறுகிறார்.

காலை, மதியம், மாலை, இரவு என்று எந்த ஒருநேரமும் குறிப்பிடாது "எண்ணிய வேளை" என்று பொதுப்படக் கூறியதன் மூலம் எந்தஒரு நேரத்திலும் அவனை நினைக்கலாம்; நேரம் கால வரையறை ஏதும் இதற்கு இல்லை; நாம் நினைக்கும்போது உடனிகழ்ச்சியாக அவன் நம்முள் இருப்பான் என்கிறார் புலவர்.

7. அபயம் தருவான் :

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் உயிர்ப்பாதுகாப்பு, உளப்பாது காப்பு, உடற்பாதுகாப்பு, உடைமைப் பாதுகாப்பு என்பன முக்கியமானவை. இவற்றை ஒருசேரவோ, ஏதேனும் ஒன்றை மட்டுமோ முழுமையாகத் தரவல்லவர் உலகில் அரிதினும் அரிது.

காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனில் பலராவர் - ஏலா
இடர்ஒருவர் உற்றக்கால் - ஈர்ங்குன்ற நாட -
தொடர்புடையேம் என்பர் சிலர்

(நாலடியார் 113)

என்பதே உலகியல்.

இவ்வுலகியலுக்கு நேர்மாறானவன் இறைவன் ஒருவனே. ஈட்டிய பெருஞ் செல்வத்தை இழக்க நேரும் காலத்தும், காலன் வந்து அழைக்கும் காலத்தினும்கூட "அப்பா வந்து காப்பாற்று" என்று வேண்டினால் ஓடோடி வந்து வாட்டம் தீர்த்துக் காக்கும் ஆற்ற

வாய்ந்தவன் திருமாற்பேறை இறைவன் என்கிறார் அப்பரடிகள். அவனை அழைக்கக்கூட வேண்டுவதில்லை; திருப்புகழ் படித்துக் கொண்டிருந்தாலே போதும்; காலன் வருங்கால் தானே வந்து காப்பான் என்கிறார் அருணகிரியார்.

"படிக்கும் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய்"

(அலங்காரம்.50)

ஆக, பிறர்யாரும் அபயம் தந்து காக்க இயலாத நோத்திலும்கூடத் தானே வந்து தலையளித்து ஆட்கொண்டருளும் தன்மையன் குன்றக்குடியான். உனக்கு அபயம் தந்து காக்கும் இவன் உன்னை விளையாட அழைக்கிறான்; வந்துவிடு என்று அம்புலியை அழைக்கிறார் பாரதியார்

"அஞ்சல்என அபயம் கொடுக்கும் என் ஐயனுடன்
அம்புலீ ஆடவாவே" **(அம்புலி.7)**

8. அண்டினர் துக்கம் அடங்க ஒழித்தவன்:

குளம் நிறைய நீர் நிறைந்திருப்பினும் அதனைச் சென்றடைந்து தோய்ந்தார்க்கே உடல் வெப்பம் தணிதலும், புறந்தூய்மையும் அமையும் தோயாதார்க்கு இவை வாய்ப்பதில்லை. நனைந்தனைய திருவடியனாகிய இறைவனை ஏரி நிறைந்தனைய செல்வன் என்பார் அப்பரடிகள். ஏரிநீர் அனைவர்க்கும் பொதுவாதல் போல அவனது வற்றாப் பெருங் கருணையும் அனைவர்க்கும் பொது. இதனை ஓர் உவமை வாயிலாகக் கூறுகிறார் தாயுமானவர்.

" காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போகம் எனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குதுஐயோ இன்புற் றிடநாம் இனி எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் செகத்திரே "

முன்னே இருக்கும் உணவு, காகங்கள் அனைத்துக்கும் பொது அதுபோலப் பொங்கித்த தும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க்கிடக்கும் சிவபோகம் எனும் பேரின்ப வெள்ளமும் அனைவர்க்கும் பொது. அதை நாடிச் சென்று துய்த்து இன்புறுவது ஒன்றே நம்பொறுப்பு என்கிறார். இதனை,

"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்" **(திருவருட்பயன் 9)**

என்பார் உமாபதி சிவனார்.

இறைவன் நல்லனாய் விளங்குதலும், நலமிலன் ஆதலும் நம் நடைமுறையில்தான் உள்ளது. "எல்லார்க்கும் பொதுவில் நட்டம் இடுகின்ற சிவம்" அவன் ஆதலின் அவன் சலம் – வஞ்சனை – இல்லாதவன். அனைவர்க்கும் இதமே செய்கின்றவன் ஆதலின் அவன் சங்கரன் என்கிறார் உமாபதி சிவனார்.

"நாம் உண்பது உணவுக்காகவன்று; நமக்காக"
"நாம் உடுப்பது உடைக்காகவன்று; நமக்காக"
"நாம் உயிர்ப்பது காற்றுக்காவன்று; நமக்காக"

அதுபோல நாம் வழிபடுவது கடவுளுக்காகவன்று; நம் நலனுக்காக என்பார் வணக்கத்திற்குரிய தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள். உணவும், உடையும், காற்றும் தம்மைச் சார்ந்து துய்க்கின்றவருக்கே நலம் தருவது போன்று நலம் தருகின்றவன் இறைவன். அவனை வழிபடுவது நம் பொருட்டே என்பார் அவர்.

"சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கு அல்லால்
நலமிலன் நாடொறும் நல்குவான் அவன்" **(தேவாரம் 4, 11, 6)**

என்பார் அப்பாடிகள்.

இச்செய்தியைப் பிள்ளைத்தமிழ் ஆசிரியர்,

"அண்டினர் துக்கம் அடங்க ஒழித்தவன்" **(செங்கீரை. 9)**
"சிட்டர் தொழும் பத்மபத; பத்தர் இடர் வெட்டு குக" **(சிறுபறை. 8)**
"யார்க்கும் அனுகூலன்" **(வருகை. 1)**

என்று விரிவாகக் கூறுகிறார்.

துக்கம் அடங்க ஒழித்தல், இடர் வெட்டுதல், யார்க்கும் அனுகூலன் என்பன ஆழமான பொருள் பொதிந்தவை.

ஏ. ஆறெழுத்துத் தலைவன் :

ஐந்தெழுத்துத்தலைவன் சிவபெருமான், ஆறெழுத்துத் தலைவன் முருகன்; எட்டெழுத்துத் தலைவன் திருமால்.

"நாதன் நாமம் நமச்சிவாயவே" **(தேவாரம் 3, 49, 1)**
"அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே" **(தேவாரம் 3, 22, 2)**

என்பனவற்றால் "நமசிவாய" என்பது சிவபரம்பொருளின் திருப்பெயராக மட்டுமின்றி, அவனை அடைதற்குரிய திருமந்திரமாகவும் அமைந்துள்ளதை அறியலாம்

அருட்டிரு பாம்பன் சுவாமிகள் அருளிய திருவலங்கல் திரட்டில் இருபதிகங்கள் ஆறெழுத்துண்மை என்ற ஒரே தலைப்பில் உள்ளன. ஒரு பதிகம் முழுதும் மகுடமாகச் "சரவணபவவே" என்பதும், மற்றொரு பதிகம் முழுவதும் "பெயர் ஆறு அக்கரங்களே" என்பதும் அமைந்து முறையே திருப்பெயராகவும், திருமந்திரமாகவும் "சரவணபவ" என்பது அமைந்துள்ளமை குறிக்கப்பெறுகிறது.

முருகப் பெருமானுக்குச் "சரவணபவ" என்பது மட்டுமன்றி ஐந்தெழுத்தாலான திருப்பெயரும் திருமந்திரமும் உண்டு; அது "ஆறுமுகம்" என்கிறார் அருணகிரியார். அதனை ஆறுமுறை ஓதி மாதவர்கள் நீறணிவர் என்பதைப் பழநித் திருப்புகழில்,

"ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்று ஓதி
ஆகம் அணி மாதவர்கள்" **(திருப்புகழ் 153)**

என்கிறார்.

இதனைப் பாரதியார் தம் பிள்ளைத்தமிழில்,

"அக்கரம் ஆறுஉள குக்குடகேதன" **(சப்பாணி.9)**
"ஆறெழுத்துத் தலைவன் வருக" **(வருகை. 5)**
"ஆறுகோணச் சக்ரன் வருக" **(வருகை. 5)**

என்று குறிக்கிறார்.

10. மெய்க்குரு:

"குருவும் கெழுவும் நிறனாகும்மே" **(தொல் 786)**

என்பார் தொல்காப்பியர். நிறமாவது ஒளி. குரு என்ற தீந்தமிழ் உரிச்சொல் நிறம், ஒளி, மேன்மை, பெருமை என்ற பொருள்களைத் தருவது. இது, ஒளியும் மேன்மையையும் பெருமையையும் தற்கிழமையாகப் பெற்று அவற்றைப் பிறர்க்கு வழங்கும் குருமூர்த்தியையும் குறிக்கும். குருமூர்த்தியருள் தலைமையும் முதன்மையும் உடையவர் ஆலமர் செல்வன்.

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறைஆ றங்கமுதல்
கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்குஅப் பாலாய்

எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி
இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவனை நினையாமல் நினைந்துபவத்
தொடக்கை வெல்வாம்'' - பரஞ்சோதி திருவிளையாடல், பாயிரம் 13)

என்பது சனகாதியர்க்கு ஆலமர் செல்வனாய்ச் சிவபெருமான் எழுந்தருளிச் சின்முத்திரை காட்டி உபதேசித்ததைக் கூறுவது.

ஆலமர் செல்வனாகிய சிவபெருமானுக்கும் குருமூர்த்தியாய் விளங்குகின்றவன் முருகப்பெருமான். குருவுக்குக் குருவான இவனது பெருமை கருதிய குமரகுருபர அடிகள் இவனைக் ''குரு'' என்று கூறாது. உயர்வு கருதிய பன்மைவிகுதி கூட்டிக் ''குருக்கள்'' என்கிறார்.

''முக்கண் திருத் தாதையார் பணி குருக்களை''
(முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், காப்பு. 10)

என்பது அது.

அருணகிரியார் முருகனைக் ''குருநாதன்'' என்கிறார். இது சிவபெருமானுக்கு உபதேசம் செய்த தலைவன் என்ற பொருளில் வேற்றுமைத்தொகை ஆகிக் ''குருவுக்குநாதன்'' என்றும், இருபெயரொட்டுப்பண்புத் தொகையாய்க் கொள்ளுங்கால் ''குருவாகிய நாதன்'' என்றும் விரிந்து பொருள் தரும்.

முருகனிடம் அவன் திருத்தாதையார் உபதேசம் பெற்ற முறையை

''சீயனம் போதி என வாய் புதைத்துச் செவி தர''
(கந்தர் அந்தாதி. 19)

என்றும்,

''தெ[illegible]ண செவிதனிலே போதம் அருளிய குருநாதா''
(திருப்புகழ் 1025)

என்றும் குறிப்பிடுகின்றார் அருணகிரியார்.

முருகன், சிவபிரானுக்கு மட்டுமன்றி அகத்தியருக்கும் அருணகிரியாருக்கும் உபதேசித்த பெருமையன். இதனை,

''ஈசனுக்கும் குறுமுனிக்கும் எழிலருணைப் புலவனுக்கும்
பேசரிய பிரணவத்தின் பெரும் பொருளை அறிவித்தாய்''
(குன்றக்குடிக்கலம்பகம். 1)

என்பார் வண்ணச்சரபம் சுவாமிகள்.

தனக்கு உபதேசித்ததை அருணகிரிநாதரே மிகத் தெளிவாக,

"அருணை நகர்மிசை கருணையொடு அருளிய
பரம ஒருவச னமும் இரு சரணமும் - மறவேனே"

(திருப்புகழ் 565)

என்று கூறுகிறார்.

அகத்தியருக்குச் சின்முத்திரை காட்டி உபதேசித்ததாகத்

"திதிகொண்ட குறுமுனிக்கு உபதேச நாள் செய்த
சின்முத்தி ரைக்கரத்தால்" (சப்பாணி. 3)

என்றும், திருவாயால் உபதேசித்ததாக,

"தெண்டனிடு குறுமுனிக்கு உபதேசம் அதுசொன்ன
திருவாயின் முத்தம் அருளே" (முத்தம். 3)

என்றும் இப்பிள்ளைத்தமிழில் பாரதியார் குறிக்கிறார். மேலும்

"பொங்கு திரைக்கடல் உண்டவன் மெய்க்குரு
ஆடுக செங்கீரை" (செங்கீரை. 7)

என்று உபதேசித்த வகை கூறாது பொதுப்படவும் கூறிப் போற்றுகிறார்.

11. தாரகமாரக:

தாரகம் என்பது பிரணவமாகிய ஓங்காரத்தைக் குறிப்பது. ஓங்காரம், மந்திரங்களுள் சிறந்ததும் வீடு பேறு தர வல்லதும் ஆகும். "தாரக" என்றவரின் ஓங்காரத்தில் எழுந்தருளியுள்ளவனாகிய முருகனைக் பது/ குறிப்பது.

"ஓங்காரத்து உள்ஒளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு
தூங்கார் தொழும்பு செய்யார் என்செய்வார் எமதூதருக்கே"

(அலங்காரம். 55)

என்று ஓங்காரத்துள் முருகனைக் காண நம்மைத் தூண்டுகிறார் அருணகிரியார்.

சிவபரம்பொருளுக்குப் பிரணவம் உபதேசித்த பெருமான், சுவாமிநாத குருவாகத் திரு ஏரகத்தில் – சுவாமிமலையில் – எழுந்தருளியுள்ளான் என்பது மரபு. சுவாமிமலைத் திருப்புகழில்

"சே ஏறும் ஈசர் சுற்ற மாஞான போதபுத்தி
சீராக வேயுரைத்த குருநாதா" (212)

என்கிறார் அருணகிரியார். பாம்பன் சுவாமிகள், திருஏரகப்பதி பற்றிய பதிகத்தில்,

"மங்கை பாக னார்க்கு வேத வாக்கு மூலம் சொன்னவா" (4:2)
என்பார். நம் பாரதியார் இப் பிள்ளைத்தமிழில்,

"ஏரகம் மேவிய தாரக மாரக" (சப்பாணி. 7)
என்கிறார்.

தாரக மாரக என்பதைத் தாரகன் மாரகன் என்னும் இரு பெயர்களின் விளிகளாகக் கொள்ளுங்கால், ஓங்காரமானவனே, மகாசங்கார வினை முதலே என்று பொருள் தரும். தொடர்மொழியாகக் கொள்ளின் சூரபதுமனின் இளவலாகிய தாரகாசுரனை மாய்த்தவனே என்று பொருள் தருவதாகும்.

12. வினைதணிவேல்

சைவ சமயம், நாம் செய்வதை வினை என்றும், அதன் பயனாக அமைவதை ஊழ் என்றும் வலியுறுத்தும். "ஊழ்வினை உருத்து வந்து ஊட்ட வல்லது" என்பது திருவள்ளுவர் போன்ற சான்றோர்களால் வலியுறுத்தப் பெறினும்

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்" (குறள். 620)

என்று அவர் கூறுவதுடன் அவ்வூழைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்யவும் நம்மால் இயலும் என்பார். திருஞானசம்பந்தர்,

அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃது அறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பி ரான்கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்து எம்மைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்
(தேவாரம் 1, 11, 6, 1)

என்று கூறுவதன் மூலம், நாம் அனுபவித்துத் தீர்த்தற்கு உரிய வினைப்பயன், உருத்து வந்து ஊட்டாதிருக்கத் தொண்டு செய்து, சிவபெருமான் திருவடியைப் போற்றுங்கள் என்கிறார்.

பற்றற்ற நிலையில் கைவினை செய்து, பிரான் கழல் போற்றுவதால் கிடைப்பது ஞானம். ஞானத்தின் குறியீடாக விளங்குவது வேல். வேல் வழிபாடு ஞான வழிபாடாகும்; ஞானம் வழங்குவதாகும். இது வினைகளை ஓட்டுவது. இதனை

"மெய்ஞ்ஞான அயிலோனே"
"வினை ஓட விடும் கதிர்வேல் மறவேன்" - (அநுபூதி. 40)

என அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார். இக்கருத்து மழவைப் பாரதியாரால்

"துங்கமலை பணிபவர்கள் தங்கள்வினை தணியஒரு
சொந்தஅயில் எறிய வருக" (வருகை. 10)

என்று சொல்லப்படுகிறது.

நம்வினை தணிக்க வல்ல அயிலுக்கு, அடைமொழியாகச் "சொந்த" என்பது அமைந்துள்ளது. இது, பிற எத்தெய்வத்துக்கும் கருவியாக இல்லாதது என்பதுடன், முருகனைவிட்டுப் பிரிக்க இயலாதது என்பதையும் உணர்த்துவது. முருகனைப் பிரியா இதன் பண்பு காரணமாக இதனை "உடம்பிடி" என்போம். முருக வழிபாட்டில் திருவுருவம் அமைத்துக்கொள்ள இயலா நிலையில் வேலை மட்டும் எழுந்தருளச் செய்து வழிபடும் வழக்கம் உண்டு.

13. சேவலும் மயிலும் :

உதிக்கும் தனிமாமரம் எனவே ஓங்கும் அசுரன் உடல்மடிய ஒருவேல் பிறக்க, இருபிளவின் ஒருபாதி சேவலாகவும், மறுபாதி மயிலாகவும் உருப்பெற்றது. இவை இரண்டும் முருகனின் திருவருட் பதிவுக்கு உரியன ஆனமையால் இவை எல்லையில்லாப் பேராற்றல் உடையனவாயின. இதனால் இவற்றின் பேராற்றலைப் பாடாத முருகனடியார் இலர்.

சேவல் கூவும்போது சிறகடித்துக் கொள்ளும். முருகன் கொடிச்சேவல் சிறகடித்துக் கொண்டது. இதனால் ஏற்பட்ட விளைவுகளை அருணகிரியார்,

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகை எனும்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்து
உடைபட்டது அண்டக டாகம் உதிர்ந்தது உடுபடலம்
இடைபட்ட குன்றமும் மாமேரு வெற்பும் இடிபட்டவே.
(அலங்காரம். 12)

எனக் காட்டுகிறார். முருகன்கொடிச் சேவல் சிறகடித்துக் கூவியதன் விளைவுகளை இப் பிள்ளைத்தமிழ் ஆசிரியர்,

"கோவும் குதித்துக் கரைபுரண்டு குமிழி எழும்பி அலைசிதறக்
குடக்கும் குணக்கும் தெரியாது குளிர்மா மதியும் கோகனகக்
கோவும் நடுங்கித் திசைமாறத் திசைக் குஞ் சரமும் செவிடுபடச்
செவியே கண்ணாம் அரசர் எனச் சிறக்கும் அரவும் விழிபுதைப்ப

மேவு புறத்துஅண் டமும் வெடிப்ப விபுதர்க்குஅரசும் திசைமுகனும்
வெருவ வடவைக் கனல் அடங்க, வெவ்வாய் திறந்து
கூவும் சேவற் கொடி" உடைய கோவே(தால். 4)

என்கிறார்.

முருகனின் ஊர்தியான மயில் ஓங்கார வடிவினது என்பார் அருணகிரியார். சோலைமலைத் திருப்புகழில் இதனை

ஆனதனி மந்திர ரூபநிலை கொண்டது
ஆடும்மயில் என்பது அறியேனே (439)

என்கிறார்.

மயில் ஆடும்போது எடுத்து வைக்கும் காலடி அதிர்வினாலும், படபடத்துத் துடிக்கும் பீலிக் கொத்து அசைவினாலும் நிகழ்வனவாக,

"..... வாகனப் பீலியின் கொத்து
அசைபடு கால்பட்டு அசைந்தது மேரு; அடியிட எண்
திசை வரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்பட்டதே."
(அலங்காரம்.11)

என்கிறார் அருணகிரியார்.

மயிலின் நடனத்தால் விளைந்த விளைவுகளைப் பாரதியார் தம் பிள்ளைத் தமிழில்,

கடல்அகடு கிழியவரும் அலைசுவற நெடியவட
கனக கிரி நிலைபெயர நீள்
கறைஒழுகு படஅரவு திசைகள்பட விசையினொடு
கடகளிறு பிளிறநெடுமால்
வடதருவின் மறையமறை புகலும் அயன் அகல் வனச
மலரில் விழ அமரர்இரிய
மதி பருதி தனது நிலை விடஉடு இவ் வுலகினிடை
மலர் சொரிவ என உதிர
புடவிகிடு கிடு என உமை யவளும் எமது அரனும் இது
புதுமைஎன உடல் பதறியே
புயல்கள்சள சள எனவிழு மழைசொரிய இன அசுரர்
பொருமனது பறையறையவே
திடதுடின மொடு கடின நடனமிடும் மயில் முருக (செங்கீரை. 5)

என்று பாடுகிறார். இதனால் கண்களுக்கு விருந்தாகும் உலகமயில் நடனம் போன்றதன்று முருகன் ஊர்தியான மயிலின் நடனம் என்பதை உணர்த்துகிறார்.

14. சரவணப்புனிதம் :

முருகப் பெருமான், உலகம் உய்ய உதித்த பொய்கை சரவணப் பொய்கை. எனவே முருகன் தலங்கள் தோறும் சரவணப் பொய்கையுண்டு. இதன் புனிதத்தைப் பாரதியார் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

குன்றக்குடியிலுள்ள சரவணப் பொய்கையில் நீராட வருவோரின் இருவினை மூட்டைகளை எல்லாம், அது தன்மீது பட்டு வெளிப்படும் தண்ணிய காற்று ஆகிய தூதுவனை விட்டு வழிப்பறி செய்கிறது. வினை மூட்டைகளைப் பறி கொடுத்ததால் அவர்களை இறையுறையும் உலகில் வாழ்கின்றவர்களாக – சாலோக வாசிகளாக ஆக்குகிறது. நீராட வருவோர் தன்முன் அணைந்ததுமே தண்ணிய நீர்த்துளிகளாகிய மருந்தினைத் தனது அலைக்கரத்தால் அவர்கள்மீது பிறவிநோய்க்கு மருந்தாகத் தெளித்து, அவர்களுக்கு இறைவன் அருகில் இருந்து தொண்டு புரியும் சாமீபப் பதவியளிக்கிறது. அவர்கள் அப்பொய்கையில் நீராடிய நிலையில் அவர்கட்குப் பெருமானை ஒத்த திருவடிவம் கொடுத்தலாகிய சாரூபப் பதவி யளிக்கிறது. இங்ஙனம் அவர்களை மேன்மேல் உயர்த்துவதை,

"மன்னுதன் புனல்மூழ்க வருவோர்கள் தீங்கெலாம்
மாருதத் தூதர் விட்டே
வழிப்பறி பறித்துத் தரங்கக் கரங்களால்
மங்கலம் எடுத்தெ றிந்து
சந்திதா னத்தில்வரு வோர் சென்ம நோய்க்கெலாம்
தண்துளி மருந்த ளித்துச்
சாலோக மும்தந்து சாமீப மும்தந்து
தண்புனல் படிந்த பேர்க்குப்
பன்னிரு கரங்களும் பன்னிரு புயங்களும்
பன்னிரும லர்க்கண்களும்
பன்னிருவர் போல் மகர குண்டலம் இலங்குகுழை
பனிரெண்டும் மூவிரண்டு
சென்னியும் தருசர வணப்பொய்கை" (முத்தம்.5)

என்று அழகாகப் புகழ்கிறார்.

தன்பால் நீராட வரும் அடியார்களுக்குச் சாலோக, சாமீப, சாரூப பதவிகளை நல்கும் சரவணப் பொய்கை, சாயுச்சிய பதவி – பேரின்பமுத்தி – நல்காதா என்ற வினா எழுவது இயற்கை. அதை

அருளவல்லவன் குன்றக்குடியான் ஒருவனே. அவன் திருமுன்பு போய் நின்று அன்பே என் அன்பே என்று அன்பால் அழுது அரற்றின் அது வாய்க்கும் என்பதை நம் உய்த்துணர்விற்கு விடுத்தார்.

15. குட்டுதலா தாளமிடலா

பிரணவப்பொருள் கூற அறியாத பிரமனை முருகன் குட்டிய செய்தியை அருணகிரியார், தாளமிடுதல் என்று திருப்புகழில் நயமாகக் குறிக்கிறார்.

நாலுமுகன் ஆதிஅரி ஓம்எனஅ தாரம் உரை
யாதபிர மாவை விழ மோதி பொருள் ஓதுகென
நாலுசிர மோடு சிகை தூளிபட தாளமிடும் - இளையோனே

(திருப்புகழ் 993)

என்பது அப்பகுதி. பிரமன்குட்டுப்பட்டதை, எண் அலங்கார வகையில்

"ஐ ஆன னத்தெவ்வை ஆறு ஆ னனம் கொண்டு
அடர்த்திடும் மணிக்க ரத்தால்" **(சப்பாணி. 6)**

என்கிறார் பாரதியார்.

தன் ஐந்தலைகளின் காரணமாக முன்பு தன்னை ஐம்முகச் சிவமாக மதித்துச் செருக்கிய ஐந்தலைப் பிரமனை அவனது செருக்கு ஒழிய ஆறு தலையனாக இருந்து முருகன் குட்டினான். அங்ஙனம் குட்டியதன் விளைவுகளை

கரம் ஒன்று பொன்வளை கலீர் என்ன மாறாது
கங்கணத்தொனி பு லம்பக்
காந்தளம் போதெனக் கரதலம் சேப்பநற்
கணையாழி விரல்அ ழுந்தச்
சிரமும்ச டாடவியும் அசையவெண் நிலவோடு
தெண்ணிலவு மூரல் காட்டிச்
சிவனும்ச பாசென்ன உமையவள் சரோருகச்
சித்தம்க ளிக்க வேதன்
உரமும் தி டுக்கென்ன வாணிநெஞ்சு அஞ்சவான்
உம்பர்கோன் ஊழி காலத்து
உருமேறு இதாம் என்ன விண்ணவர் நடுங்கவே
ஒருதரத்து ஈரி ரண்டு
தரமும்க ணீரிடக் குட்டும் ஒரு செங்கையால்
சப்பாணி கொட்டி யருளே **(சப்பாணி.5)**

என்கிறார்.

16. வணங்கும் முறை :

முருகப்பெருமானைக் கண்டுகண்டு உள்ளம் குளிரக் கண் குளிர்ந்த குறுமுனிவர், அவன் திருவடிகளில் ''தாடலை''யாக விழுந்து வணங்கினார். அவருக்கு முருகன் உபதேசம் செய்தருளினான். அகத்தியர் முருகனை வணங்கிய முறையைக் கூறுமுகமாக, அருளாளர்களையும், ஆண்டவனையும் வணங்க வேண்டிய முறையை நமக்கு உணர்த்தி மழவை சுப்பிரமணிய பாரதியார் நம்மை ஆற்றுப்படுத்துகிறார். அகத்தியர் வணங்கிய முறையை, ''விந்திய மலையின் செருக்கடக்கிய கைவிரல்களைத் தரையில் பொருந்த வைத்து, உலகெலாம் தன்னை வணங்குமாறு பொதியமலையை மிதித்த கால்விரல்களைத் தரையில் ஊன்றி, உலகு வளைத்த கடலைப்பருகிய திருவாய் மௌனமாக, வாதாபியின் உயிருண்ட வயிறு நிலம் தோய்தலால் புழுதிபட, காதணியாகிய குண்டலம் தரையில் படுமாறு செவிகளைத் தாழ்த்தி, இருகரம் கூப்பி, தரைபடத் தன் தலையினைப் புரட்டி, இருபுயமும் மார்பும் விழிகளும் பூமியிற்படத் தெண்டனிட்டார் என்று விவரிக்கிறார்.

''விண்தலத்து உயர்விந்த கிரிதனை அடக்கியகை
விரல் எலாம் தரையில் வைத்து,
மேதினி வணங்கவே பொதியமா மலைதனை
மிதித்தகால் விரலை ஊன்றி,
மண்தலம் புனைஆடை என்னவளை கடலுண்ட
மணிவாயும் மௌனம் ஆக,
மறையவர்கள் உயிர் கொண்ட வாதாவி உயிருண்ட
வயிறெலாம் புழுதி தோய,
குண்டலம் கீழ்விழச் செவிதாழ இருகரம்
கூப்பித்த ரம்பு ரட்டிக்
குவடனைய இருபுயமும் மார்பும் மலர் விழியுமே
குவலயத் தூடுஅ ழுந்தத்
தெண்டனிடு குறுமுனிக்கு உபதேசம் அது சொன்ன
திருவாயின் முத்தம் அருளே...'' **(முத்தம். 3)**

என்னும் அழகிய பாடல் நமக்கு எட்டு உறுப்புகள் நிலம் தோய வணங்கும் முறையைத் தெளிவாகக் கற்பிக்கின்றதன்றோ?

17. இதய பரிசுத்தம் :

உடற் கூற்றியலில் கூறப்படும் இதயம் வேறு; உள்ளம் வேறு. இதயம் பருப்பொருள், உள்ளம் நுண்பொருள். ஆயினும் உள்ளம்

இல்லாதவனை நாம் இதயமில்லாதவன் என்கிறோம். எனவே உள்ளத்தை உலகியல் வழக்கில் பாரதியாரும் இதயம் என்று ஆள்கிறார்.

உள்ளத்தை இதயம் என்பது ஏன்? நம் இதயம் ஒருபோதும் வாளா இருப்பதில்லை; சதா இயங்கிக்கொண்டே இருக்கிறது. அதுபோல நம் உள்ளமும் சும்மா இருப்பதில்லை; ஓயாது எதையேனும் எண்ணி எண்ணி அசைபோட்டுக்கொண்டே இருக்கிறது. உடற் கூற்றியல் நோக்கில் இதயம் தன்பால் நான்கு அறைகளைக் கொண்டு இயங்குவது. மெய்ப்பொருளியல் அறிஞர், ஏதேனும் ஒன்றைச் சிந்திக்கும் ''சித்தம், சிந்தித்தது நன்றா தீதா என்று வினவும் ''மனம்'', இவ்வினாவுக்கு விடைகாண முற்படும் ''அகங்காரம்'', இது இத்தகையது என்று முடிவுகட்டும் ''புத்தி'' என்று நான்கு கூறுகளையுடையது உள்ளம் என்பர். இக்காரணங்கள் கருதி நாம் உள்ளத்தை இதயம் என்கிறோமா? என்பது அறிஞர்களின் சிந்தனைக்குரியது.

நிலவை முருகனுடன் விளையாட அழைக்கும்போது, நிலவே நீ இதய பரிசுத்தம் – உள்ளத்தூய்மை – இல்லாதவன் என்று குற்றம் சாட்டுகிறார் பாரதியார். நிலவிடம் உள்ள குற்றங்களாக அவர் கூறுவன எவை? அவர் கூறுவதைக் கேட்போம்.

''நிலவே உனக்கு ஒளி தந்து உன்னை வாழ்விக்கின்ற ஞாயிறு மறைவதற்காக நீ சிறிதும் வருந்தவில்லை; மாறாக ஒளியுடன் உலா வருகின்றாய். உன் இருபத்தேழு மனைவியருள் உரோகிணியிடம் மட்டும் தனிக்காதல் கொண்டு நடந்ததால் ஏற்பட்ட காசநோயால் நீ நித்திய நோயாளியானாய். இந்நிலையிலும் தேவகுரு பிரகஸ்பதியின் மனைவியாகிய தாரையைக் கூடி வஞ்சித்த குருத்துரோகி நீ; இங்ஙனம் இதய பரிசுத்தம் இல்லாதவனாயினும் கூட, உன்னுடன் விளையாட முருகன் உன்னை அழைக்கிறான். இந்நிலையில் செய்ய வேண்டுவதென்ன? நாம் செய்த பாவம் தீர்த்துக்கொள்வதற்காகப் புனித நீராட நாம் செல்லும்போது, அத்தீர்த்தமே நம்முன் வந்து நின்றால் எத்துணை மகிழ்வுடன் அதில் நீராடிப் பாவம் தீர்ப்போம். அதுபோல உன்பாவம் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு, முருகன் உன்னை விளையாட அழைப்பதன்மூலம் உனக்குக் கிடைத்துள்ளது. நழுவவிடாதே; வா; வந்து இவனுடன் விளையாடுவதன் மூலம் உன்பாவங்களைத் தீர்த்துக்கொள்'' என்று அம்புலியை அழைக்கிறார்.

"நிச்சயம தாகவே மித்திரன் மறைந்திட
நிலாக்களை விளங்க வந்தும்
நிரோகிணிப் பெண்ணினால் சயரோக மும்கொண்டு
நிசரோகி யாய்இ ருந்தும்
இச்சையொடு பிறர்மனை நயந்துகுடி லத்தோடும்
எந்நாளு மேவ ளர்ந்தும்
இதயபரி சுத்தமில் லாமல்அந் தக்கரணம்
என்றும்க ளங்க முற்றும்
செச்சைப் புயத்துஇளவல் விளையாட வாஎன்று
திருவுளம் உனக்க ளித்தால்
சென்றாடு தீர்த்தமது வந்து ஆடி னோம்என்று
சென்னிகுவி யாத தேனோ?
அச்சப்ப டாமல்எனது ஐயனுட னேதினமும்
அம்புலீ ஆட வாவே" (அம்புலி. 9)

உன் இதய பரிசுத்தமின்மை காரணமாக உன்னைத் தண்டித்து விடுவானோ என்று அஞ்ச வேண்டா; ஆதரிப்பான்; இவனுடன் விளையாட வா என்று அழைக்கிறார் கவிஞர்.

18. தண்டனையா? உயர்த்துதலா?

"பிள்ளைக்கவிக்கு அம்புலி புலி" என்பர். காரணம்; விளையாட வராத அம்புலிக்குச் சாம, பேத, தான, தண்டம் கூறி அதனை அழைத்தல் வேண்டும். இவற்றில் தண்டம் கூறி அழைக்க வேண்டிய பகுதி மிகமிக நுட்பமானதாக அமைதல் வேண்டும் என்பர். "தண்டம் என்பது தண்டனையாக மட்டும் அமையாது, அதற்கு உரியவரைத் திருத்தி உயர்த்தவும் வேண்டும்" என்ற உளவியல் அடிப்படையில் அமைதல் அகத்தியமானது. இவ்வகையில் ஒருபாடலைக் காண்போம்.

"கையின்வடி வேலுக்குஉன் உடலத்தை யேவெள்ளி
கட்டவே தகடடிப்பான்;
காதிற்கு முருகுமுத் தாமென்று சேவலில்
கட்டிவிளை யாடவிடுவான்;
பையவே மயிலுக்கு மூக்குத்தி முத்தென்று
பார்த்து உன்உட லம்துளைப்பான்;
பாரவெங் கோட்டுக்கி டாய்க்குச்சி லம்பென்று
பாதத்தி லேஅணிகுவான்;
மையலுடன் வருதெய்வ யானைக்கு மாலையிடு
மணவாளன் வர அழைத்தால்
வாராதி ருப்பதுவும் ஆச்சரிய மே! உனது
மதிமோச மதம் அல்லவோ?" (அம்புலி.8)

அம்புலியை வேலுக்குக் கவசமாக்கல், சேவலுக்குக் காதணியாக்கல், மயிலுக்கு மூக்குத்தியாக்கல், பண்டை ஊர்தியாகிய ஆட்டுக்கிடாய்க்குக் கால் சிலம்பு ஆக்குதல் என்பன அதன் வடிவழகைச் சிதைப்பனவாதலின் தண்டனைகள் ஆகும். ஆயினும் முருகன் அதனைத் தன்னைச் சார்ந்துள்ள வேல் முதலியவற்றுக்கு உரியதாக்கித் தன்னுடனேயே வைத்துக்கொள்ளுதல் என்பது, தவறேதும் இனிச் செய்யா நிலையை அம்புலிக்கு உண்டாக்குவதுடன், உயர்த்துதலும் ஆகும். எனவே இது உளவியல் அடிப்படையில் தண்டனையளிப்பதன் நோக்கத்தை முழுமையாகப் பின்பற்றுவதாய்ச் சிறந்து விளங்குகிறது. திருடன் கையில் பெட்டிச் சாவியைத் தந்து அவனைக் கூடவே வைத்துக் கொள்வது போன்றது இது எனலாம்.

19. வெள் ஓதிமத்தாய் :

குன்றக்குடி நாற்புறத்தும் தாமரையும் அல்லியும் மலரும் குளங்களையுடையது. நற்றாமரைக்கயத்தில் நல்லன்னம் சேர்தல் இயல்பு. இவ்வன்னங்கள், குன்றக்குடித் தாய்மார்கள் தத்தம் புனிற்றிளங் குழவிகளைப் பேணுதல் போலவே, தமது புனிற்றிளம் பார்ப்புகளைப் பேணும் காட்சியைக் காட்டுகிறார் பாரதியார்.

குழவிக்குப் பாலூட்டும் தாய்மார் குழவியைத் தம் மார்போடு அணைத்துக்கொண்டு தமது இரு மார்புகளிலும் பாலூட்டுவர்; குழந்தையின் உடல் தேற, உடல் தேற்று மருந்தாகிய "ஊறு சங்கு மருந்து" புகட்டுவர்; மருந்து புகட்டிய சங்கினால் குழந்தையின் முகத்தை மும்முறை சுற்றிச் சங்கினைத் தரையில் கவிழ்த்து வைப்பர்; குழந்தை பால் பருகும்போது கூடவே காற்றும் குடித்திருக்கும், ஆகையால் அக்காற்றினை வெளியேற்றத் தமது தோளில் குழந்தையை மெள்ளச் சாய்த்துக்கொண்டு மென்மையாகத் தட்டி ஏப்பம் விடச் செய்து உட்புகுந்த காற்றை வெளியேற்றுவர். பின்னர் அதனைத் தொட்டிலில் கிடத்தி அருகில் இருந்து தொட்டிலாட்டி உறங்க வைப்பர்.

இரவிலும் இந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதுடன் இரவு நேரம் செரிமானக் குறைவான நேரமானதால் செரிமான மருந்து புகட்டுவர்; பால் குடித்ததுமே உறங்கவைக்காது அதனை விழித்திருக்கச் செய்து செரிமானத்துக்கு உதவியாக அக்குழந்தையுடன் சிறிது நேரம் கொஞ்சி விளையாடுவர். பிறகு அதனை மார்போடு அணைத்து ஆழ்ந்த உறக்கம் அமையச் செய்வர்.

பகலில் ஊறுசங்கு மருந்து செந்தாமரைத் தேன்; இரவில் செரிமான மருந்து செங்குமுதத் தேறல்; புகட்டும் சங்கு மலரிதழ்.

"பொன்னிறத் தூவிகொடு அணைத்துவெள் ஓதிமம்
பொற்பிளம் பார்ப்பினுக்கு
புணர்முலைப் பாலொடுக லந்து செங் கமலப்
பொகுட்டுறைந றாஎடுத்துத்
துன்னிதழ்ச் சங்கு கொடு புகட்டிவத னத்திடைச்
சுழற்றிக்கு றங்குதட்டித்
துய்யபங் கேருக மணித்தொட்டி விட்டுத்
துதைந்துதா லாட்டி இரவின்
மன்னுசெங் குமுதப் பசுந்தேறல் ஊட்டி மலர்
வாய்வளைய மாறியுண்டு
மணிவயிறு தேக்கிட்டு இரதிகேளி விளையாடி
மார்பிடைத் துயில் கூரவே
தென்னிடும் களிவண்டு சூழ்நேம நாடனே" (செங்கீரை. 3)

குன்றக்குடித் தாய்மார் தத்தம் குழவி புரந்தரும் செயலைப் பார்த்துப் பார்த்து அன்னப் பறவைகளும் இங்ஙனம் குழவி பேணின என்க.

20. தென்றல் உலா :

"அங்கங்கே கலைகள் தேறும் அறிவன்போல்" உலவும் தென்றலுக்குரிய பருவம் இளவேனில். குன்றக்குடியில் இளவேனிற் பருவத்துக்குரிய மன்மதன் முதலாக, தெரிவையர், குயில், கமுகிளம்பாளை, மல்லிகை, இளநீர், வரிவண்டு, தாமரை, காந்தள், கடம்பு, தும்பை, மக்களின் இன்பநுகர்ச்சி என்று அனைத்துடனும் தென்றல் உலவியதை வருணிக்கிறார் பாரதியார்.

"மன்றலம் தெரிவையர்கு ழாம்எதிர் செலக் காள
மாஇளங் குயில்கள்கூவ,
வன்கமுகு இளம்பாளை சாமரைஇ ரட்டமுகை
மல்லிகைச் சங்கொலிக்க
இன்றுதினம் நன்றென இளந்தெங்கு தலையசைத்து
இளநீர்கு லுங்கவரிவண்டு
இசைபாட வனசமுகை மலரமலர் வாய்திறந்து
எதிர்மொழி தரக்கிஞ்சுகம்
துன்றுசெங் காந்தளம் கைகுவிய நறுமலர்கள்
சொரிகடம்பு அலர்விரிக்கத்

தும்பை மலர் நறவுஒழுகும் அன்னரா சிகள் எனத்
தொடைவேள் விருந்தருந்தத்
தென்றல் அங்கு உலவிவரு குன்றையம் பதி முருக...''

(செங்கீரை. 4)

இதன் மூலம் குன்றக்குடி வளமும், ஊரவர் வாழ்வின் இன்ப நலமும் சுட்டப்படுகிறது.

இதில் வரும் ''முகை மல்லிகைச் சங்கு ஒலிக்க'' என்னும் தொடர், நளவெண்பாவில் மாலை வருணனை பற்றிய பாடலடியாகிய ''மல்லிகையே வெண்சங்கா வண்டு ஊத'' என்ற தொடரை அடிஉட்கொண்டு, அதுபற்றி எழுந்த விவாதத்தை நினைவூட்டுகிறது.

21. உவமைகள் சில.

21. அ. அனிச்சமலர் :

அனிச்சமலர் பற்றிய குறிப்பு, திருக்குறளில் நான்கு இடங்களில் வந்துள்ளது. இவையனைத்தும் அதன் மென்மையை இயம்புவன. அவற்றுள் ஒன்று,

''மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து'' (குறள் 90)

என்பது.

நினைத்தல், காணுதல், எடுத்தல் ஆகிய மூன்று நிலைகளிலும் வாடாத அனிச்ச மலர், நுகர்தலாகிய நான்காம் நிலையில் வாடும். ஆனால், முருகன் திருவடி, முனிவர்கள் மனத்தால் நினைத்து அதனை முயங்குதலாகிய முதல் நிலையிலேயே வாடிவடும். ஆகவே அனிச்ச மலரை விட மென்மையான அவன் திருவடியைத் தாமரைக்கு இணையானது என்று கூறுகின்றவர்கள், திருவடியின் மென்மையை அறியாதவர்கள் என்கிறார்.

''மோக்கக் குழையும் அனிச்சமலர்
முனிவர் மனத்தில் உற நினைத்து
முயங்கக் குழையும் உனதுபதம்
முளரிக்கு இணை என் பர்அறியார்'' **(சிற்றில். 10)**

முனிவர் மனத்தால் நினைப்பது, ஏதோ மேலோட்டமானதன்று; சிக்கெனப்பற்றி நினைப்பர்; ஆதலால் ''நினைந்து'' என்று கூறாது ''நினைத்து'' என்று வல்லொற்று வைத்துக் கூறினார்.

ஆ. கூடுவிட்டுக் கூடு பாய்தல் :

மாபாரதப் போரில் விசயனுக்குத் தேரோட்டியாக அமர்ந்த கண்ணபிரான், அவன் பொருட்டுத் தனது சக்கரப்படையால் ஞாயிற்றை மறைத்தார். நேரமல்லா நேரத்தில் ஞாயிறு திடீர் என்று மறையவே, உலகியல் நிகழ்வுகள் மாறின. இதனைக் குறிப்பிடும் பாரதியார் உலக இருட் படலத்தை ஓர் உருண்டையாக உருட்டி விழுங்கித் திரியும் ஞாயிற்றைக் கண்ணபிரான் தனது ஆழிப்படையால் மறைத்ததால், தேன்நாடி உண்டு திரிந்த வண்டினம் குவியும் தாமரை மலர்களில் ஒடுங்கின; இரைதேடித் திரிந்த பறவைகள் திகைத்து அருகில் இருந்த பிற பறவைகளின் கூட்டில் அடங்கின. பறவைகளின் இச்செயல் தன் உடம்புவிடுத்துப் பிறிதொருவர் உடம்பில் புகும் யோகியின் செயல் போன்றது என்கிறார்.

"வேரிச்செ முங்கமல மலர்குவிய, மலரினிடை
விளரிவண் டினம் ஒடுங்க,
மேவுபர காயமுறு யோகி என மறுகூட்டில்
வீறுபுள் ளினம் அடங்க,
பாரில்ப டர்ந்திலகு கவளமென எழு திமிர
படலம்முழு தும் விழுங்கப்
பரிதிமண் டலம் மறைய ஓராழி தொடநின்ற
பச்சைப்ப சும்கொண்டலே." (காப்பு. 4)

என்பது அப்பகுதி.

இதிலுள்ள "பச்சைப் பசுங்கொண்டலே" என்ற தொடர் திருமாலைக் குறிப்பது இத்தொடர்; குமரகுருபர அடிகளின் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்க் காப்புப் பருவத்தில் வரும்

"பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப்ப சுங்கொண்டலே" (4)

என்ற தொடரை நினைவூட்டுகிறது.

நன்கு மென்று உண்ணாது, ஒருவன் மீதூண் விழுங்கும் நிலையில் அது செரிமானமாகாது சிறிதுநேரத்தில் வாந்தியாக வெளிப்படும். ஞாயிறு, உலக இருட் படலமாகிய மீதூணை நாடோறும் விழுங்கித் திரிவதால், விழுங்கப் பெற்ற இருட்படலமாகிய உணவு வாந்திபோல நாடோறும் வெளிவந்து கொண்டே உள்ளது என்று எண்ண வேண்டிய நிலையில் "விழுங்க" என்ற சொல்லாட்சி அமைந்துள்ளது.

இ. கயிலையும் விடையும் :

சிவபெருமானின் ஊர்தியாகவும் கொடியாகவும் விளங்குவது விடை. இது அறத்தின் குறியீடு என்பர். எருதின் சிறப்பை,

"உழுதநோன் பகடு அழி தின்றாங்கு"(புறம் 125)

என்றும்

"உழவுஒழி பெரும் பகடு அழிதின்றாங்கு" (புறம் 366)

என்றும், புறநானூறு எடுத்துரைக்கும்.

அறத்தில் இருந்து அறத்தை உயர்த்தியவன் சிவபெருமான்.

"ஊர்தி வால்வெள் ஏறே சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்ஏறு என்ப." (புறம். கடவுள் வாழ்த்து)

என்பார் பாரதம் பாடிய பெருந்தேவனார். இதில் உள்ள "வால்வெள்" என்பதும் "சிறந்த சீர் கெழு" என்பதும் விடையாகிய அறத்தின் சிறப்பை உணர்த்துவன.

"வெள்ளிக் குன்றன்ன விடை" (தேவாரம் 6, 3, 2)
"சங்கத்த முத்தன்ன வெள்ளை ஏறு" (தேவாரம் 6, 20, 2)

என்பன குறிக்கும் வெண்மை விடையாகிய அறத்தின் நிறத்தை மட்டுமன்றித் தூய்மையையும் குறிப்பன ஆகும்.

பாரதியார்,

"தடவரை எனும் கயிலை வேர் விழுந்தன்ன விடை" (காப்பு. 2)

என அளக்கலாகா அளவும், மாசு மறுவற்று ஒளிரும் தூய வெண்மையும் கொண்ட கயிலையை உவமை காட்டுவதன் மூலம் விடையின் மாண்புகளை உணரச் செய்கிறார்.

ஈ. ஆனையும் அரியும் :

மற்றொன்று சூழினும் தான் முந்துறும் ஊழிற் பெருவலியாவுள? என்று வினவுவார் திருவள்ளுவர். உருத்து வந்து ஊட்டும் அது, ஆகூழாயின் முயற்சியைத் தோற்றுவித்து ஆக்கம் தரும்; போகூழாயின் மடியினைத் தோற்றுவித்துக் கேடு தரும். இவ்வகையில் ஆக்கம் கேடு ஆகியவற்றுக்குக் காரணமான நம் அறிவை விரிவு படுத்தும் அல்லது பேதைப்படுக்கும்.

ஊழை வெல்ல வழியுண்டா? உண்டு என்பது நம் சமயக் கொள்கை.

அவ்வினைக்கு இவ்வினை யாம்என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதி ருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பி ரான்கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்து எம்மைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்
(தேவாரம் 11, 6, 1)

என்பார் திருஞானசம்பந்தர். எனவே கைவினையாகிய திருத்தொண்டாற்றுதலும், எம்பிரான் கழல் போற்றுதலும் ஊழின் வலி சிந்துவன என்பது அறியலாம்.

"அவன் கால்பட்டு அழிந்தது இங்கு என்தலை மேல் அயன்
கையெழுத்தே " (அலங்காரம். 40)

என்பார் அருணகிரியார்.

பாரதியார் ஊழ்வினையையும், அதனை அழிக்கும் பெருமானையும் முறையே ஆனையாகவும் அரியாகவும் உருவகிக்கிறார்.

"ஞானத் தவர்கள் தமை மயக்கி நாளும் பிறப்புக்கு இடமாக்கி
நலியும் வலிய வினைப்பயனை நளின மலர்த்தாளால் அழிக்க
ஆனைக்கு ஒருகே சரியான அரசே சிற்றில் அழியேலே"
(சிற்றில். 6)

என்று வேண்டுகிறார்.

இச் செய்யுளில் "பேதைப்படுக்கும் இழவு ஊழ்" என்ற திருக்குறள் கருத்து "ஞானத்தவர்கள் தமை மயக்கி" என்பதில் அமைந்துள்ளது.

பரியது கூர்ங்கோட்டதாயினும் ஊக்க மிகுதியில்லாத யானையாக ஊழ்வினையையும், கூரிய நகங்களுடன் ஆற்றல் மிக்க ஊக்க மிகுதியும் பெற்ற ஆண் சிங்கமாக முருகப்பெருமானையும் உருவகிப்பதன் மூலம் நாம் நம் தீயூழை அழித்துக் கொள்ள வழிகாட்டுகிறார்.

22. முப்புர எரி :

பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளையுடைய தாரகாட்சன், வித்யுன்மாலி, கமலாட்சன் ஆகிய மூவரும் உயிர்க் குலத்துக்குச் செய்த துன்பம் துடைக்கச் சிவபெருமான் தன் புன்முறுவலால் அக்கோட்டைகளை எரித்து அம்மூவரையும் பணி கொண்டான் என்பர். சிவபெருமானின் எண்வகை வீரச்செயல்களுள் இதுவும் ஒன்றாகப் போற்றப் பெறுகிறது. மூவெயில் எரியுண்டதில் விளைந்த வெண்ணீறு பூசி ஆடிய திருக்கூத்து "பாண்டரங்கக் கூத்து" என்பர். பாண்டு --

வெண்மை. வெள்ளிய நீற்றரங்கில் ஆடிய கூத்து ஆதலின் இப்பெயர் பெற்றது. இதனை,

''மண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால் பணை எழில் அணைமென்தோள்
வண்டு அரற்றும் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ''

(கலித்தொகை கடவுள் வாழ்த்து)

என்பார் நல்லந்துவனார். ''பாண்டரங்கம்'' என்பது பண்டரங்கம் என்று விகாரமாயிற்று என்று குறிப்பார் உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர். முப்புர எரிபற்றிக் கூறும் திருமூலர்,

''அப்புஅணி செஞ்சடை ஆதிபு ராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்;
முப்புரம் என்பது மும்மலகாரியம்
அப்புரம் எய்தமை யார்அறி வாரே'' **(திருமந்திரம் 343)**

என்பார். ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களின் காரியத்தை அழித்தமையே முப்புர எரி என்பது தத்துவம்.

முப்புர எரியில் மூவசுரர் நிலை என்ன? சுந்தரமூர்த்தி நாயனார்,

''மூவெ யில்செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளர்என்று ஏவிய பின்னை
ஒருவன் நீகரி காடரங் காக
மானை நோக்கிஓர் மாநடம் மகிழ
மணிமு ழாமுழக் கஅருள் செய்த
தேவ தேவநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே **(தேவாரம் 7, 55, 8)**

இதன்மூலம் தாரகாட்சனும் வித்யுன்மாலியும் பெருமான் திருக்கோயில் வாயிற்காவலராகவும், கமலாட்சன் கரிகாடு அரங்கில் பெருமான் ஆடும் திருக்கூத்துக்கு மணிமுழா முழக்குகின்றவனாகவும் ஆக்கப்பெற்றனர் என்றறிகிறோம்.

சிவபெருமானின் என்வகை வீரச்செயல்களுள் முப்புரஎரியும் மன்மதன் எரியும் எரியூட்டி அழித்தவை. இவை இரண்டில் முந்தியது எது? பிந்தியது எது? திருஞானசம்பந்தரின் முக்கீச்சரப் பதிகம் விடை தருகிறது.

"விண்டவர்தம் மதில்எய்தபின் வேனில் வேள்வெந் தெழக்
கண்டவர்முக் கீச்சரத்துஎம் அடிகள்செய் கன்மமே"

(தேவாரம் 2, 120, 3)

என்பதால் முப்புரஎரி முன்னும், மன்மதன் எரி பின்னுமாக நிகழ்ந்ததை அறிய முடிகின்றது.

முப்புர எரிக்கு எழுந்த சிவபெருமானுக்கு இணக்கமாக நின்றவர்கள், நின்றவை பற்றிப் பாரதியார்,

"பண்தேறு கந்தருவர் விண்ணவர்கு ழாமெலாம்
படையாக வடமேருவே
பாரவில் லாகவா சுகியுமே நாணாகப்
பச்சைமால் கணையாகவே
மண்தேறு தேராக மறை நான்கு புரவியா
மலர் அயனும் வலவனாக
மதியமும் பருதியும் தேருருளை யாகநம்
வாசவன் தெண்டனிடவே
கண்டு ஏறு தேன்மொழிப் பச்சைப்ப சுங்கொடி
கலந்துஇடப் பாகம் வளரக்
கருதுதிரி புரநிருதர் நகையில் எழு சிகி எழக்
கண்டுநிர்த் தூளி படவே
திண்தேர் உருட்டிவரு கயிலைநா யகன்மகன்
சிறுதேர் உருட்டியருளே (சிறுதேர். 1)

என்று சிரித்து எரித்த முப்புர எரிக்கு உடன் நின்றவர்களை முழுமையாகக் காட்டுகிறார்.

23. சிவகோடி அவதாரம் :

பரம்பொருளின் உண்மையுரு – சொரூபம் – ஞானம் ஆகும். இது ஞானியர்க்கு மட்டுமே புலனாவது. பிற அனைவர்க்கும் அருள்புரியக் கொண்ட திருமேனி அருவம், உருவம், அருவுருவம் ஆகும்.

இதனை,

"அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவம் உடையான் உளன்" (திருவருட்பயன். 5)

என்பார் உமாபதி சிவனார்.

சிவம், சத்தி, நாதம் விந்து ஆகிய நான்கு அருவத்திருமேனிகளும், சதாசிவன் ஆகிய அருவுருவத் திருமேனி ஒன்றும், மகேசன், அரன்,

அரி, அயன் ஆகிய நான்கு உருவத்திருமேனிகளும் ஆகிய ஒன்பது திருமேனிகளைத் தவிர, சிவபரம்பொருள், அண்டத்தில் அல்லனகடிந்து நல்லன காக்கக் கொண்டதிருவுரு, முருகப்பெருமான் திருவுரு. இதனை,

"வளம்செறி இனைய பாலால் வான்சர வணமாம் பொய்கைத்
தளம்செறி பதுமம் ஒன்றில் சராசரம் யாவும் காப்பான்
உளம் செறி கருணை எய்தி ஒப்பிலாக் குமரமூர்த்தி
இளம்சிறு மதலை போல இனிதுவீற் றிருந்தான் மன்னோ"
(கந்தபுராணம் 1, 11, 113)

என்பார் கச்சியப்ப சிவாசாரியார்

கச்சியப்பரின் "இளம் சிறுமதலை" என்ற தொடர் நம் பாரதியார் வாக்கில் "கோடி" என்ற சின்னஞ்சிறு சொல்லாக வெளிப்படுகின்றது.

"சிவகோடி அவதார வருமுருக" **(சிறுபறை. 2)**

"ஞானமே வடிவான சிவபெருமானது மிக இளைய அவதாரம் முருகன்" என்பது இதன் பொருள்.

24. நித்திய சாம்ராஜ்யம் :

முத்திநிலை பதமுத்தி, பரமுத்தி என்று இருவகைப்படும். பதமுத்தியை அபரமுத்தி என்றும் கூறுவர். இறையுலகில் வாழ்தல் (சாலோகம்) இறைவனுக்கு அணுக்கராய் நெருங்கியிருத்தல் (சாமீபம்) இறைவனை ஒத்த வடிவம் தாங்கி இருத்தல் (சாரூபம்) என்பன பத முத்திகள். இறைவனுடன் இரண்டறக் கலந்து இன்புறும் நிலை பரமுத்தி. இதனைச் சாயுச்யம் என்பர். "மற்று ஈண்டு வாரா நெறி" என்று திருக்குறள் இதனைக் குறிக்கிறது.

பரமுத்தி, இரவாகிய ஆணவமும் பகலாகிய மாயையும் இல்லாதது என்பதைத் திருவிசலூர் உய்யவந்ததேவ நாயனார்,

"இரவு பகல் இல்லா இன்பவெளி" **(திருவுந்தியார். 20)**

என்பார், இருமலமும் இல்லை எனவே வினைமலமும் இல்லை என்க. இறை, அது நல்கும் இன்பத்தை நுகரும் ஆன்மா இரண்டினையும் பற்றித் தாயுமான அடிகள்,

"ஒன்றும் இரண்டும் இல்லதுவாய் ஒன்றும் இரண்டும் உள்ளதுவாய்
நின்ற சமத்துநிலை நேர்பெறுவது எந்நாளோ" **(எந்நாட். 15)**

என்பார்.

இதனை அருணகிரியார்;

"நீவேறெ ணாதிருக்க நான்வேறெ ணாதிருக்க
நேராக வாழ்வதற்குஉன் அருள்தாராய்" (திருப்புகழ். 212)

என்பார்.

வேறுவேறான இறையும் ஆன்மாவும் முத்தியில் கலந்துள்ள நிலைபற்றி,

"முத்தி தனைஅடைந்தோர் முத்தியும் போது அங்கி
வித்தகமாம் வீணை இவையிற்றின் - ஒத்த
தீரதமணம் வெம்மை எழில்நாதம் போல
விரவுவர் என்று ஓதும் நீதி" (உண்மை விளக்கம்.45)

பழமும் அதன் இரசமும் போல இறைவனுடன் ஆன்மா கலந்திருக்கும் முத்திநிலையைப் பாரதியார் "நித்தியசாம்ராஜ்யம்" என்கிறார்.

நிலவை முருகனுடன் விளையாட அழைக்கும் இவர், "இவனுடன் நீ விளையாடவா; வந்தால் நித்திய சாம்ராஜ்யமுடன் நீ வாழலாம்" என்கிறார்.

"சண்முகக் கடவுளுடன் விளையாட லாம்நித்ய
சாம்ராஜ்ய முடன் வாழலாம்" (அம்புலி. 10)

என்பதன்மூலம் நிலைத்த பேரின்பமாகிய நித்திய சாம்ராஜ்யத் தலைவன் அருள்தரு சண்முகநாதப் பெருமா என்றும் உணர்த்துகிறார்.

நிறைவு உரை :

மயூரகிரிநாதர் பிள்ளைத்தமிழின் ஆசிரியராகிய மழவராயனேந்தல் சுப்பிரமணிய பாரதியார் குன்றக்குடி அருள்தரு சண்முக நாதப் பெருமானைக் குல தெய்வமாகப் பெற்ற அருளாளர். அவனருளால் ஒருபகற்பொழுதில் இந்நூலைப் பாடி முடித்து அதன் பயனாக இருபுதல்வர்களையும் பெற்றவர்.

சந்த நலம் கொழிக்கும் இந்நூல் செய்யுட்கள் நம் திருமுறைகள், சாத்திரங்கள் மற்றும் அருளாளர் பாடற் கருத்துகளையும் தொடர்களையும் தம்முட் கொண்டு ஒளிர்கின்றன. "நவில்தொறும் நூல் நயம்" என்ற திருக்குறட் பகுதிக்கு இலக்கியமாய் மிளிர்கின்றன.

இதனை ஒருமுறை படித்தவரும் கூட, கரும்பினிலே சுவையறியும் குழந்தைகள் போல் அடுத்தடுத்து இதன் சுவையில் ஈடுபட்டு இதனைக் கற்பர். எண்ணியவர் எண்ணியவாறு அருளும் தெய்வமாகிய குன்றக்குடியான், இந்நூற்பயனாகிய மகப்பேற்றினை மட்டுமன்றி இதனை ஓதுவார்க்கு அவர் விரும்பும் பேறுகளை எல்லாம் அருள்வான். ஓதி உணர்ந்து அருள் பெற்று உயர்வோம்.

திருச்சிற்றம்பலம்.



தெய்வத்திரு. பீ. எஸ். சின்னசாமிக்கவுண்டர்

தமிழ்த்தெய்வமாம் முருகவேளை நாளும் தொழுதேத்திய கௌமாரத் தொண்டர் தெய்வத்திரு. P.S. சின்னசாமிக்கவுண்டர் அவர்கள், கோவை, துடியலூரை அடுத்துள்ள பழனிக்கவுண்டன்புதூரில் 1921ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர். பாரம்பரிய வேளாண்தொழிலில் துவங்கி, மலர்வணிகத்தில் சிறந்து பொருளீட்டியவர். நான்கு வாரிசுகளைப் பெற்று, அவர்கட்குக் கல்வியும் நல்வாழ்வையும் அமைத்தவர். காரைமடை அருகிலுள்ள குருந்தமலையில் எழுந்தருளியுள்ள முருகனிடம் ஆழ்ந்த பக்தி கொண்டிருந்த அவர், மாதந்தோறும் கிருத்திகை வழிபாட்டுக்கட்டளைகளைத் தவறாது நடைபெற வழிவகுத்தவர். கல்வி உட்படப் பல்வேறு தர்மகாரியங்களில் தளராது சேவையாற்றியவர். சீரிய வாழ்வு நிறைந்து 1996ஆம் ஆண்டு ஆனித்திங்கள் கிருத்திகையன்று P.S.C. என்று அறியப்பட்ட அவர், தாம் என்றும் போற்றி வணங்கிய திருமுருகனடி சேர்ந்தார்.

அவருடைய நினைவாகச் சிரவணபுரம் கௌமார மடாலயத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் தவத்திரு. கஜபூசைச் சுந்தரசுவாமிகள் அவர்களின் குருபூசையையொட்டி ஆண்டுதோறும் நடைபெறுமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.